விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 28 வியாழக்கிழமை (11.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 114

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# குற்றச் செயல்களை ஒழிக்க ஒருமாத கால அவகாசம்!

## பொலிஸாருக்கு நீதிபதி இளஞ்செழியன் பணிப்பு



(யாழ்ப்பாணம்) வடமாகாணத்தில் நடைபெறும் சட்டவிரோத செயல்கள் மற்றும் குற்றச்செயல்களை பொலிஸார் ஒரு மாதத்துக்குள் ஒழிக்க வேண்டும் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன் நேற்று உத்தரவிட்டுள்ளார். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த உத்தரவை பிறப்பித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## அப்துல் கலாம் இலங்கை வருகை

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல் கலாம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் ஊடக பேச்சாளர் மஹிஷினி கொலனனே நேற்று தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடக 24ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் மங்கள ஜப்பான் பயணம்

(கொழும்பு)

ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் பூமியோ கிசிடாவின் அழைப்பின் பேரில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வரும் 17 ஆம் திகதி ஜப்பானுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீர, இம் மாதம் 17ஆம் திகதி முதல் 20 ஆம திகதி வரை 24ஆம் பக்கம் பார்க்க....

## பசில் ராஜபக்ஷவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல நீதிவான் தம்மிக ஹேமபால உள்ளிட்ட மூன்று நீதிவான்கள் உத்தரவிட்டனர்.

திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில், பசில் ராஜபக்ஷ மற்றும் 23ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்புக்குத் தேவையான இராணுவத்தினரே உள்ளனர்

### யாழ்.கட்டளைத் தளபதி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான அளவு இராணுவத்தினர் மாத்திரமே நிலைகொண்டுள்ளதாக யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

பலாலி இராணுவ படைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு காணப்படும் அச்சுறுத்தல் மற்றும் அவரது பாதுகாப்பு சம்பந்தமாக கிடைத்துள்ள முறைப்பாடு தொடர்பாக பொலிஸ் மா அதிபர் கவனம் செலுத்தியுள்ளார. 24ஆம் பக்கம் பார்க்க....

## நம்பிக்கையில்லா பிரேரணையை கைவிட ஜனாதிபதி வலியுறுத்தல்

### ரணிலுக்கு எதிரானது



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கைவிடுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தைக் கோருவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சித்து வருகின்ற நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த கோரிக்கையை விடுத்துள்ளதாக அறிய முடிகின்றது.

இதன்படி அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ள தேர்தல் முறை மாற்ற யோசனை அரசியலமைப் 24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய தேர்தல் முறையால் வடக்கிற்குப் பாதிப்பு !

### அத்துரலிய தேரர் கவலை

(கொழும்பு)

புதிய தேர்தல் முறையினால் வடக்கில் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை குறைவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இது அனைத்துலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் எச்சரித்துள்ளார்

புதிய தேர்தல் முறை மாற்ற யோசனைக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டதை அடுத்து, நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் 24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையுடன் அமெ.முரண்பாடு?

(கொழும்பு)

ஈரானிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதற்கு அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது. ஈரானுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடையே இதற்கு பிரதான காரணம் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

10 பில்லியன் பெறுமதியுடைய ஒரு மில்லியன் எரிபொருள் கொள்கலன்களை இலங்கை பெற்றோலிய 23ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணை குழுவுக்கு மேலும் இருவர்

(கொழும்பு)

யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரும் கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மேலும் இரண்டு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய ஆணையாளர்களை ஜனாதிபதி 23ஆம் பக்கம் பார்க்க....

## போதைப்பொருள் வைத்திருந்தால் மரணதண்டனை விதிக்கப்படும்!

### யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின், அபின், மோபின் போன்ற போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்தாலோ அதனை விற்பனை செய்ததாக குற்றவாளியாகக் காணப்பட்டாலோ, யாராக இருந்தாலும், அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் எச்சரிக்கை செய்துள்ளார்.

இந்தத் தீர்ப்பில் போதைப் பொருளானது, சமூகத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகள் நியதிகளைத் தகர்த் 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா ... க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு பிரதி அமைச்சர்கள் நேற்றுச் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

புதிய பிரதி அமைச்சர்கள் நால்வர் நேற்று மாலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

இவர்கள் நேற்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் முன்னிலையில் சத்தியப பிரமாணம் செய்து கொண்டுள்ளனர் என ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதி அமைச்சர்களாக விஜய தஹநாயக்க, சனத் ஜயசூரிய, திலங்க சுமதிபால மற்றும் எரிக் வீரவர்தன ஆகியோரே சத்தியபிரமாணம் செய்துள்ளனர்.

விஜய தஹநாயக்க பொது மக்கள் சமாதானம் மற்றும் கிறிஸ்தவ மத விவகார பிரதி அமைச்சராகவும், சனத் ஜயசூரிய மாகாண சபை மற்றும் பிரதேச அபிவிருத்தி பிரதி அமைச்சராகவும், சத்தியப்பிரமாணம் செய்தனர்.

அத்துடன் திலங்க சுமதிபால திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி பிரதி அமைச்சராகவும், எரிக் வீரவர்தன துறைமுகம் மற்றும் கடற்போக்குவரத்து பிரதி அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (எ-11)

# மாத்தறைக் கூட்டத்தில் மகிந்த பங்கேற்பார்!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த வலியுறுத்தி எதிர்வரும் 12 ஆம் திகதி மாத்தறையில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் 4 அமைச்சர்களும் 75 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடா



ளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற கட்டிடத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்வார். அவர் மாத்தறையில் பிறந்தவர். அன்றைய தினம் அதுபற்றி பார்த்து கொள்ள முடியும் எனவும் குமார் வெல்கம குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இந்த ஊடக சந்திப்பில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன, மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்த 58 லட்சம் பேருக்கு மேலதிகமாக மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏமாந்து வாக்களித்த மக்களும் மாத்தறை கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என குறிப பிட்டுள்ளார். (எ-11)

# வயோதிபர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

இறால் பிடிக்கச் சென்ற ஒருவர் சாவடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் சாவகச்சேரி கடல் நீரேரிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

சாவகச்சேரி, பெரியபுலத்தைச் சேர்ந்த கந்தையா தர்மலிங்கம் (வயது 73) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர்.

சாவகச்சேரி நீரேரியில் நேற்று முன்தினம மாலை இறால் பிடிப்பதற்காகச் சென்ற இவர் இரவு ஆகியும் வீடு திரும்பாததால் வீட்டார் தேடிச் சென்றபோது அவர் கடலில் சடலமாக மிதந்துள்ளார்.

இதனையடுத்து நேற்று அதிகா லை சடலத்தை மீட்ட சாவகச்சேரி பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைந்துள்ளனர். (எ-11)

# புலம்பெயர்ந்தோர் விழாவை நடத்த அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

இந்த வருட இறுதியில் அரசாங்கம், புலம்பெயர்ந்தோர் விழாவை நடத்தவுள்ளதாக வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது

நல்லிணக்க முனைப்பின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

வாராந்த செய்தியாளர் சந்திப்பில் நேறறு உரையாற்றிய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மஹிசினி கொலன்னே, இந்த விழாவின் மூலம் புலம்பெயர்ந்தோரின் நல்லெண்ணத்தை இலங்கையின் அபிவிருத்திக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார்

புலம்பெயர்ந்த இலங்கையர்களில் புத்தி ஜீவிகள் மற்றும் நிபுணர்கள் நாட்டுக்கு வர விரும்புகின்றனர்

அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு துணையாக இருப்பர். இதன் ஒரு கட்டமாக கடந்த வாரம் புலம்பெயர்ந்தோர் அமைப்புக்களுடன் சந்திப்பு இடம்பெற்றது

இதில், அமைச்சர் மங்கள சமரவீர பங்கேற்றார் என்றும் கொலன்னே குறிப்பிட்டார்.

இதேவேளை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை புலம்பெயர்ந்தோருடன் இணைந்து நடைமுறைப்படுத்தி இறுதி சமாதானத்தை அடைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்கிறது என்றும் கொலன்னே குறிப்பிட்டுள்ளார். (எ-11)


# நீதிமன்ற தாக்குதல் மற்றொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்றத்தின் மீது கடந்த மே மாதம 20ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் நீதிமன்ற கதவை காலால் உதைத்து திறந்து உள்நுழைந்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ. சிவகுமார் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

யாழ்.நீதிமன்றத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களைத் தவிர அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலதிக சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் நடைபெற்ற தினத்தில் சேகரிக்கப்பட்ட வீடியோ ஆதாரங்களை வைத்து இந்தக் குழு விசாரணைகளை முன்னெடுத்து சந்தேக நபர்களை கைது செய்து வருகின்றது. அதனடிப்படையில் விசாரணைகள் மேற்கொண்டு பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப் பட்டார். (எ-11)



பாராட்டுகின்றோம்

## திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன்

கிளிநொச்சி தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரும் (உதவி முகாமையாளர் தொழில்நுட்பம்) அகில இலங்கை சமாதான நீதவானும் சிறந்த சமூக சேவையாளருமாகிய **திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன்** ஏற்கெனவே **விஸ்வகீர்த்தி** விருதினைப் பெற்றுள்ளார். சிறந்த சமூகசேவை ஆற்றியமைக்காக கண்டி, மலையக கலை கலாசார சங்கம், யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையத்துடன் இணைந்து 07.06.2015 நடத்திய சான்றோர் கௌரவிப்பு விருது வழங்கும் விழாவில் **இரத்தினதீபம்** என்ற சமூக சேவைக்கான விருதினை இந்திய துணைத்தூதுவர் பாரத விஸ்வகீர்த்தி திரு.A.நடராஜன் அவர்களினால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவரது சமூக, சமயப் பணிகளுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கனகபுரம் மக்கள்** கிளிநொச்சி

(C-1236)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் நல்லையா அம்பிகைகுமார்

[முன்னாள் தனியார்நிறுவன தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O)]



13.05.2015 அன்று இறைபதம் அடைந்த அன்னாரின் 31ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் இன்று 11.06.2015 வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று (12.06.2015) நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் சபீண்டிகரண கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியப் போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். எமது அன்புத் தெய்வம் மறைந்த வேளை ஆறுதல் கூறியோருக்கும் இறுதி மரணச் சடங்கின் போது சகல வழிகளிலும் உதவிக் கரம் நீட்டியோர், அஞ்சலி செலுத்தியோர், அஞ்சலிப் பிரசுரங்கள் ஊடாகவும் பத்திரிகை வாயிலாகவும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளையும் இவ்வேளையில் கூறிக்கொள்கின்றோம்.

துணுக்காய் வீதி, மாங்குளம்.
0776040309

தகவல்:-
குடும்பத்தினர்


அம்ச மஹால்

மண்டப திறப்புவிழா

- Wedding
- Puberty Ceremony
- Conference
- Reception
- Birthday
- Get together



மன்மத வருடம் வைகாசி மாதம் 28-ம் திகதி இன்று (11.06.2015) வியாழக்கிழமை பகல் 8.39 முதல் 10.15 மணி வரை வரும் கடக இலக்கினமும் உத்தரட்டாதி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

மண்டபத்தைத் திறந்து வைப்பவர்

திரு. க. சுசீந்திரன்
பிராந்திய முகாமையாளர்.
யாழ்.பிராந்தியம். மக்கள் வங்கி.



மதிய போசனத்திலும் தவறாது கலந்து சிறப்பிக்கவும்.
இங்ஙனம்,
திரு.திருமதி குருசாமி தமிழ்பிரியா
(றூபன் - பிரியா)

சிறப்பு விருந்தினர்

திரு சி. நித்தியானந்தன்
சிரேஷ்ட முகாமையாளர்,
மக்கள் வங்கி

திரு. S. ரவீந்திரா
பிராந்திய முகாமையாளர்.
DFCC வங்கி.

திரு. த. சதீசன்
முகாமையாளர், DFCC வங்கி

(717)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்துள்ளனவே தவிர மக்கள் மனம் இன்னும் ஆறுதலடையவில்லை

**தென்னாபிரிக்காவின் முன்னாள் நீதியரசர் யாழில் தெரிவிப்பு**

**இலங்கையில் போர் முடிவடைந் தது. அற்புதமான நிகழ்வாக இருந்தாலும் குண்டுத்தாக்குதல்களும் துப்பாக்கிச் சத்தங்களும் ஓய்ந்துள்ளனவே தவிர மக்களின் மனம் இன்னும் ஆறுதல் அடையவில்லை என தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் அல்பீ சக்ஸ் தெரிவித்துள்ளார்.**

உண்மை நியாயம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டின் போர் முடிவடைந்த பின்னர் அபிவிருத்தி, சுதந்திரம் ஏற்பட வேண்டும். அதற்கு ஒருவருக்கொருவர் மதிப்பளிக்கும் பிணைப்பு ஏற்படவேண்டும்.

தென்னாபிரிக்க நாட்டில் 300 வருடங்களாக இனவாதம் தலைதூக்கி இருந்தது. ஆட்கடத்தல்கள், கொலைகள், கற்பழிப்புகள், போதைப் பொருள் பாவனைகள் தொடர்ந்து நடைபெற்றன.

ஆனால் நாம் எமது நாட்டை தற்போது கட்டியெழுப்பியுள்ளோம்.

தென்னாபிரிக்காவால் சாதிக்க முடிந்ததை இலங்கையாலும் சாதிக்க முடியும். நல்ல நாடாக வருவதற்கு இலங்கை அவா கொண்டுள்ளது. அதற்கு ஒற்றுமை மிக முக்கியம்.


பல்லின கலாசாரம் உள்ள நாட்டில் ஒற்றுமையை ஏனைய பல குழுக்களை அமைப்பதன் மூலம் கொண்டு வரமுடியாது. அனைவருக்கும் சமத்துவம் கிடைப்பதன் மூலமே ஒற்றுமையை உருவாக்க முடியும். எமது நாட்டின் வெற்றிக்கு பெரிய வரலாறு உள்ளது. அதில் நாம் எல்லோரும் மனிதர்கள் என்ற விடயத்தை ஒவ் வொருவரும் உணர்ந்திருந்தோம். அதனால் நாம் வெற்றி கொள்ள முடிந்தது.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்கினோம். பல சவால்கள் இருந்தது. இதை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வருடத்தை செலவிட்டோம். ஆண்கள், பெண்கள் என அனைவரும் இதில் அங்கம் வகித்தனர். அனைவருடைய கருத்துக்களையும் கேட்டறிந்தோம்.

பலர் உண்மைகளை கூறிய படியால் அதிகாரிகள் பிழைகளை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு மன்னிப்பும் அளிக்கப்பட்டது. நல்லிணக்கத்துக்கான வழியை ஏற்படுத்துவதற்கு ஒவ்வொருவராக முன்வந்து தமது பிழைகளை ஏற்று உண்மையை கூறினார்கள். பல குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மக்களுக்கு இழப்பீடுகள் கிடைத்தன.

வன்முறைகளைக் கடந்து வருகின்ற நாடுகளில் நீதியைப் பெற்றுக் கொள்வது மிகவும் கடினமானது. ஆனால் முயற்சி செய்தால் இயன்றளவு நீதியை பெற்றுக் கொள்ள முடியும்.

அதற்கு ஒற்றுமை மற்றும் உண்மையை கூறுவது மிகவும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் கொடியேற்றம் நேற்று இடம்பெற்ற போது...

# வெள்ளைமாளிகைக்கு வெடிகுண்டு மிரட்டல்!

**பத்திரிகையாளர்கள் வெளியேற்றம்**

(கொழும்பு)

அமெரிக்காவில் உள்ள வெள்ளை மாளிகையில் வெடிகுண்டு வைத்திருப்பதாக நேற்றுக்காலை வந்த மிரட்டலை அடுத்து அங்கிருந்த ஊழியர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வோஷிங்டனில் உள்ள அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில், தினமும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடப்பது வழக்கம். இதற்காக செய்தியாளர்கள் அனைவரும் அறையில் காத்திருக்கும் போது, அந்த அறையில் வெடிகுண்டு இருப்பதாக கூறி வெள்ளை மாளிகை அதிகாரிகள் பத்திரிகையாளர்கள் அனைவரையும் அவசரமாக வெளியேற்றினர்.

சட்டப் பிரிவு மையத்துக்கு மிரட்டல் தொலைபேசி அழைப்பு ஒன்றில் மாளிகையின் அறையில் வெடிகுண்டு இருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து மோப்ப நாய்கள் உதவியுடன், வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை நடத்தினர், பல மணி நேர சோதனைக்குப் பிறகும் வெடிகுண்டுகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாம்

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் 100 நாள் வேலைத் திட்டத்தில் அளித்த வாக்குறு திகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் குற்றம் சாடடியுள்ளார்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் அடிப்படையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

100 நாள் திட்டத்தில் பல் வேறு நலன்களை மக்களுக்கு அளிப்பதாக இந்த அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது.

சமுர்த்தி கொடுப்பனவை 200 வீதத்தினால் உயர்த்துதல், இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் அடகு வைக்கப்பட்டிருந்தால் அதற்கான வட்டி, அபராதப் பணத்தை ரத்து செய்தல், விவசாயிகளின் அனைத்து கடன்களையும் 50 வீதத்தினால் குறைத்தல், வயோதிபர்களுக்கான கொடுப்பனவுகளை கிரமமாக வழங்குதல் போன்ற பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதிலும் அவை நிறைவேற்றப்படவில்லை.

வயோதிபர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்குவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் இரண்டு மாதங்களாக வயோதிபர்கள் தபால் நிலையங்களில் அலைந்து திரிந்து வருகின்றனர். எனினும் பணம் கிடைக்கவில்லை.

தங்க நகை அடகு வைத்தல் தொடர்பிலான சலுகைத் திட்டம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என வங்கிகள் கூறுகின்றன.

அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் விவசாயிகளின் கடன்கள் வெட்டப்படவில்லை.

நாட்டில் பணத் தட்டுப்பாடு கிடையாது எனவும் போதியளவு பணம் இருப்பதாகவும் நிதி அமைச்சர் கூறுகின்றார்.

போதியளவு நிதி இருந்தால் திட்டங்களை அமுல்படுத்தவும், அல்லது அந்த திட்டங்களுக்கு பணம் பெற்றுக்கொள்ளும் முறைமையை தெளிவுபடுத்தவும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நிதிக் கொள்கைகள் தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# இரண்டு வாய், இரண்டு மூக்கு, மூன்று கண்ணுடன் கிளிநொச்சியில் அதிசய கன்றுக்குட்டியை ஈன்ற பசு

(பொற்பதி)

கிளிநொச்சி கண்டாவளை நடுக்கரைப் பகுதியில் பசு ஒன்று இரண்டு வாய் இரண்டு மூக்கு, மூன்று கண், இரண்டு நாக்குடன் பசுக்கன்று ஒன்றை ஈன்றுள்ளது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் செல்லையா கிருஷ்ணப்பிள்ளை என்பவரது வீட்டிலேயே விசித்திரமான வகையில் பசு கன்று ஒன்றை ஈன்றுள்ளது.

இதேவேளை 2008 ஆம் ஆண்டில் பிரஸ்தாப நபரின் வீட்டில் கழுத்துப் பகுதியில் இர ண்டு தலை, இரண்டு கழுத்து என்பவற்றுடன் ஈன்ற பசுக்கன்று இறந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-64)



# இராசி பலன்

11.06.2015
வைகாசி 28, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
நவமி காலை 6.14 மணிவரை
தசமி பிற்பகல் 3.54 மணிவரை
உத்தரட்டாதி முற்பகல் 11.24 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை

வளவன்

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்களைச் செய்யும் சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மேடம்:** வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும்நாள், உறவினர்களின் வருகையுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புதிய முடிவுகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**கும்பம்:** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது ஆரோக்கியம் சீராகும்.

**கடகம்:** தடைப்பட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தொழில் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** வாகன பழுதுச்செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.

**தனுசு:** சகோதர வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்துசேரலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**துலாம்:** விருந்தினர் வருகையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

…இந்த அறையில் ஆயிரம் பேர் இருந்தாலும் நான் உங்களிடம்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். தயவு செய்து இதைப் புரிந்துகொள்ளுங்கள்.

என் ஒவ்வொரு வார்த்தையும் உங்களுக்காகவே, சக்தியைத் தாங்கி வருகிறது. அதனால் தயவுசெய்து உங்கள் மனதில் இதுபோன்ற எண்ணங்களுடன் கேட்காதீர்கள்.

பல சமயங்களில் நாம் கேள்வி கேட்பது, உண்மையிலேயே பதிலைத் தெரிந்து கொள்வதற்காக அல்ல; வெறுமனே நமக்கு வார்த்தைகளின் மேலுள்ள பேராசையாலோ அல்லது நமக்கும் கொஞ்சம் தெரியும் என்று காண்பிப்பதற்காகவோதான்.

உள்ளே ஆழ்ந்து நோக்கினீர்களா

நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அந்த இரண்டு மணி நேரத்தில் அவர் ஒரு முறை கூட அவரது முதல் கேள்வியைப் பற்றிக் கேட்கவேயில்லை.

இறுதியில் நான் அவரிடம் சொன்னேன்: ஐயா நீங்கள் இங்கு வந்தவுடன் என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டீர்கள். அதற்கு நான் பதில் சொல்லாத

வார்த்தைகளையே எதிர்பார்க்கிறார்கள், அவ்வளவே. கேள்விகள் உண்மையிலேயே நமக்குள் வார்த்தைகளைச் சேகரிக்

**ஆன்மீகம் 216**

கும் ஒரு போராட்டமாக அமைந்து விடுகின்றன. நாம் இந்த வார்த்தைகளைச் சேகரிப்பதில் பெருமிதம் அடைகிறோம்.

ஆனால், அவ்வாறு செய்வதில


## பொறாமையிலிருந்து விடுதலை!

முக்கியமாக கணவனும் மனைவியுமாக என் பேச்சைக் கேட்க வரும் பொழுது, நான் அவர்களது நடைமுறை வாழ்க்கை குறித்த விடயங்களைச் சொன்னால், கணவன், மனைவி இதைக் கேட்க வேண்டும் என்றும், மனைவி கணவன் இதைக் கேட்க வேண்டும் என்றும் எண்ணுகின்றனர். இறுதியில் இருவருமே அதை தவற விட்டுவிடுகின்றனர்.

மனிதனது உள்ளார்ந்த இயல்பு, பணத்தையும் பொருள்களையும் சேர்ப்பது. ஒருகாலத்தில் பணத்தால் வாங்க முடியாத விடயங்களும் இருக்கின்றன என்பதை உணருகிறான்.

பிறகு செல்வத்தை சேர்க்கும் வேகம் தானாகவே குறைகிறது. பிறகு அவர் வார்த்தைகள் அல்லது புத்திபூர்மான அறிவைச் சேகரிக்க ஆரம்பிக்கிறான். இது எவ்வாறோ ஒருபோதும் நிற்பதேயில்லை, அவனது வார்த்தைகளுக் கான பேராசை மேலும் மேலும் அதிமாகிறது.

எவனொருவன் செல்வத்தையும் வார்த்தைகளையும் சேகரிப்பதை நிறுத்துகிறானோ, அவன் உண்மையான அறிவைத்தேட ஆரம்பிக்கிறான்.



னால், ஒரே ஒரு கேள்வி மட்டுமே எழும்; அதுவே உங்களுடைய உண்மையான கேள்வியாகும். அந்தக் கேள்விக்கு பதில் கிடைத்துவிட்டால், நீங்கள் ஞானமடைந்துவிடுவீர்கள்!

என்னிடம் ஒருவர் கேட்டார், ஸ்வாமிஜி, கடவுள் என்பது என்ன? நான் மெதுவாக விடயத்தை மாற்றி அவரது குடும்பத்தைப் பற்றியும் தொழிலைப் பற்றியும் விசாரிக்க ஆரம்பித்தேன். நாங்கள் கிட்டத்தட்ட இரண்டு மணி

தன் காரணம், அது உங்கள் உள் ஆழத்திலிருந்து வந்த கேள்வியல்ல.

கேள்வி நமது உள் ஆழத்திலிருந்து வருமானால், நாம் அதை ஒருபோதும் மறக்கவோ அல்லது நமக்கு ஒரு திருப்தியான பதில் கிடைக்கும்வரை ஓயவோ மாட்டோம். சிலர் கேள்வி கேட்டுவிட்டுப் பதிலையும் அவர்களே சொல்லிவிட்டு, பிறகு என்னிடம் ஒரு பதிலைக் கேட்கிறார்கள்! அவர்கள் வெறுமனே என்னிடம் ஆதரவான

பெரும் உண்மையைத் தவற விட்டுவிடுகிறோம்! நாம் உண்மையை விட வார்த்தைகளுக்கே அதிக முக்கியத்துவம் தருகிறோம். இவ்வாறுதான் நாம் குருவைத் தவறவிட்டு விடுகிறோம்; இவ்வாறுதான் நாம் குருவின் வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள புரிந்துகொள்ளுதலைத் தவறவிட்டு விடுகிறோம். மக்கள் என்னிடம் கேட்கிறார்கள், ஸ்வாமிஜி, நாங்கள் ஒப்பிடுவதையும் மற்ற எல்லாவற்றையும் நிறுத்திவிட வேண்டுமென்றால் எல்லாவற்றையும் துறந்து ஆன்மீகவாதியாகிவிட வேண்டுமா?

ஒப்புதலை நிறுத்துங்கள், ஓடிக்கொண்டிருப்பதை நிறுத்துங்கள் என்றெல்லாம் சொன்னவுடன், நான் அவர்களை உலக விடயங்களிலிருந்து தப்பிஓடி, ஆன்மீகவாதியாகி விடும்படி சொல்கிறேன் என்று பலரும் நினைக்கிறார்கள். (தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### பால் கொடுக்கும் கிடா ஆடு: ஆச்சர்யத்தில் உறைந்த கிராம மக்கள்

உத்தரப் பிரதேச மாநிலத்தில் 4 வயதான கிடா ஆடு ஒன்று, பெண் ஆட்டைப் போல் பால் சுரப்பது அப்பகுதி மக்களிடையே பெரும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

எட்டாவா மாவட்டத்தில் உள்ள அதியாப்பூர் என்ற கிராமத்தில் வசிக்கும் உடல் சிங் என்பவர், இனப்பெருக்கத்திற்காக ஆட்டுச்சந்தையில் 4 வயதான கிடா ஆடு ஒன்றை வாங்கினார்.

3 நாட்களுக்கு முன் அந்த கிடா ஆட்டின் உடலில் சில மாற்றங்கள் வருவதைக் உணர்ந்தார். பெண் ஆடுகளுக்கு இருப்பது போன்று அதன் மடி கொஞ்சம் வளர்ந்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

அன்றைய தினம் 250 மில்லி லிட்டர் அளவிற்கு பால் கொடுத்த அந்த கிடா ஆடு தினசரி அவர் வளர்த்து வந்த ஆட்டுக்குட்டிகளுக்கு பால் கொடுத்து வருகிறது.



தற்போது அது இனப் பெருக்கத்திற்கும் தயாராக இருப்பதாக உடல் சிங் தெரிவித்துள்ளார்.

இந்த செய்தி காட்டுத்தீ போல் பரவ, அக்கம் பக்கத்து கிராமங்களில் உள்ளவர்கள் உடல் சிங்கின் வீட்டிற்கு படையெடுக்கத் தொடங்கினர். பலர் அந்த ஆட்டுடன் இணைந்து செல்பி எடுத்துக்கொண்டனர். இந்த ஆட்டைப் பரிசோதித்த கால்நடை மருத்துவர், இது வழக்கத்திற்கு மாறானது. ஆட்டின் உடலில் ஹார்மோன் கோளாறு ஏற்பட்டு ள்ளதே இதற்குக் காரணம் என்று தெரிவித்துள்ளார்.

# சமைப்போம் சுவைப்போம்

## தக்காளி சாதம்



**தே.பொருட்கள்:**

அரிசி - 1 கப்

துவரம் பருப்பு - - கப்

தக்காளி - 4

இஞ்சி - சிறுதுண்டு

பச்சை மிளகாய் -2

பெருங்காயம் - 1 சிட்டிகை, மஞ்சள் தூள் - 1 ஸ்பூன், உப்பு - தேவைக்கேற்ப, நெய் - 2 ஸ்பூன், சீரகம் - 1 ஸ்பூன், கடுகு - 1 ஸ்பூன், காய்ந்த மிளகாய் - 4, கறிவேப்பிலை - சிறிதளவு, முந்திரி பருப்பு - 6

**செய்முறை**

தக்காளியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பச்சைமிளகாயை இரண்டாகக் கீறிக் கொள்ளவும். இஞ்சியையும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அரிசி, பருப்பு இரண்டையும் குக்கரில் போட்டு மூன்றரைக் கப் தண்ணீரைச் சேர்க்கவும்.

அத்துடன் நறுக்கிய இஞ்சி, பச்சை மிளகாய், தக்காளி, மஞ்சள் தூள், பெருங்காயம், உப்பு சேர்த்து குக்கரை மூடி 1 விசில் வரும் வரை வேக விடவும். சிறிது நேரம் கழித்து குக்கரை திறந்து நன்றாக கிளறி விடவும்.

கடாயில் நெய் ஊற்றி கடுகு போடவும். கடுகு வெடிக்க ஆரம்பித்ததும், சீரகம், கறிவேப்பிலை, முந்திரி, காய்ந்த மிளகாய் ஆகியவற்றைச் சேர்த்து [illegible] சாதத்தில் கொட்டிக் கிளறவும். சுவையான தக்காளி சாதம் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் மீள்குடியேற்றத்தைக் குழப்ப தென்னிலங்கையிலுள்ள இனவாதிகள் முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த இனவாதிகள் அரசியல் சாயம் பூசி குழப்புவதற்கு முற்படுவதாக வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அ.ஜெயதிலக தெரிவித்துள்ளார் .

தென்னிலங்கை இனவாதிகளின் இவ்வாறான நடவடிக்கைகளைக் கண்டித்து வடக்கு மாகாண சபையில் கண்டனத்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.


வடக்கு மாகாணசபையின் 30ஆவது அமர்வு நேற்று முன்தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் உறுப்பினர் ஜயதிலகவினால் முன்மொழியிட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2009 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு பிரதேசத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த பொதுமக்களை அவர்களின் சொந்த காணிகளில் மீள்குடியேற்றும் நடவடிக்கை அரசாங்கத்தால்ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டத்திற்கு விருப்பம் இல்லாத தென்னிலங்கையைச் சேர்ந்த சில இனவாத தீயசக்திகன் மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவிதமான குழப்பத்தை ஏற்படுத்துவதனால் இப்பிரச்சினை வடக்கு மாகாணசபைக்கு உரிய விடயம் என்பது போன்று தென்னிலங்கை இனவாதிகளால் சித்திரிக்கப்படும் இச் செயற்பாட்டினை இச்சபை கண்டிக்கின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சம்பூர் காணிகள்விடுவிப்பு வில்பத்து,விவகாரம்என்பவற்றினை சபையால் அவர் சுட்டிக்காட்டியிருந்ததோடு இவைஎவ்வாறு தென்னிலங்கை இனவாதிகளினால் சித்தரிக்கப்படுகின்றன என்பது பற்றியும் தீர்மானம் மீதான தனது உரையின் போது குறிப்பிட்டிருந்தார். (இ-4)




## யாழ்.வண் வடகிழக்கு கலட்டி
## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
### இன்று இரண்டாம் நாள்



விக்கினங்கள் தீர்க்கின்ற வீரகத்தி விநாயகரே!
விநயமுடன் தாள் பணிந்தோம் காத்தருள்புரிவீர்!
பக்குவமாய் நாம் வாழ பானைவயிற்றோனே அருள்வாய்!
பாலகணபதியே ஞாலமுதல்வனே வரமருளவேண்டும்!
நெக்குருகி நின்றே நின்னைச் சரணடைந்தோம்!
நின்மலனே கணநாதா கஜமுகனே கரிமுகனே!
சிக்கலின்றி இவ்வுலகில் சீரோடும் சிறப்போடும்
விக்கினமின்றியிருக்க விநாயகனே நீ அருள்வாய்!

(C-1229)

நாச்சிமார் கோவிலடி
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை)


# திருமறைக் கலாமன்றத்தின் ஆனித்திங்கள் பொற்தூறல்

பொன்விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற 'பொற்தூறல்' நிகழ்ச்சித் தொடரின் இம்மாதத்துக்கானநிகழ்வு **'ஆனித் திங்கள் பொற்தூறல'**'என்னும் பெயரில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு, இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சேரந்த சட்டத்தரணி சோ.தேவராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்

நிகழ்ச்சிகளாக யாழ்ப்பாணம் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம் வழங்கும் நாட்டிய நாடகமும் கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் குழுவினர் வழங்கும் பண்ணிசைக்கச்சேரியும் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலையார்வலர்கள் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறுதிருமறைக் கலாமன்றம் அழைப்புவிடுத்துள்ளது. (இ)


**டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி**

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=

(336)

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்



# சேவை நலன் பாராட்டு



## திரு. எஸ்தாக்கி அந்தோனிப்பிள்ளை
### (முகாமைத்துவ உதவியாளர்– தரம் I)

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றி 11.06.2015 அன்று தனது அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு. எஸ்தாக்கி அந்தோனிப்பிள்ளை அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்சசிகரமானதாக அமையவும் உடல் உள நலமுடன் நீடூழி காலம் வாழவும் இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவர் வாழ்வில் வளமோடு வாழ முழுமன நிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

1991 புத்தளம் கச்சேரி
1993 ஆரச்சிக்கட்டு பிரதேச செயலகம்
1996 புத்தளம் மாவட்ட செயலகம்
2004 குடிவரவு, குடியகல்வு திணைக்களம், கொழும்பு
2005 மாவட்ட கடற்றொழில் அலுவலகம், புத்தளம்
2010 தொடக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
11.06.2015 வரை பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம் .

(சி-1222)

வாழ்த்துவோர்கள்:
ஆணையாளர், உதவி ஆணையாளர் மற்றும் சக உத்தியோகத்தர்கள்,
உள்நாட்டு இறைவரி திணைக்களம், பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்.



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 14 செவ்12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
தொ.இ: B/821

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 9 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BIT/ தனியார் தொழில்
தொ.இ: B/822

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 24 செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: BED, BSC/ ஆசிரியர்
தொ.இ: B/823

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 88 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: B/831

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 35 சூரிசெவ் 3 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: O/L கனடா
தொ.இ: G/1414

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 34
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: G/1416

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 19 செவ் 12 இல்
உயரம்: 4'9"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/1422

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 42
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: G/1425

# கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு இறைவரித்திணைக் களத்தின் யாழ்.பிராந்திய அலுவல கத்தினால் சிறந்த வரி செலுத்துநர் களுக்கான சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வு இன்று மாலை 6.30மணியளவில் நடைபெறவு ள்ளது.

இந்நிகழ்வில் உள்நாட்டு இறை வரித்திணைக்களத்தின் ஆணையா ளர் நாயகம் திருமதி கல்யாணி தக நாயக்கா பிரதம விருந்தினராக கல ந்து கொள்வதுடன் வரி நிர்வாகத் திற்குட்பட்ட பிராந்தியத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 24 சிறந்த வரி செலுத்துநர்கள் '' சிறப்புரிமைச் சான்றிதழ்'' வழங்கி கௌரவிக்கப் படவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள் கல ந்து கொள்ளுமாறு உள்நாட்டு இறை வரித்திணைக்களத்தின் யாழ் பிரா ந்திய பொறுப்பு உதவி ஆணையா ளர் திருமதி சு.சர்வேஸ்வரன் அறி வித்துள்ளார். (இ

# பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க நோர்வேயால் 55 மில்லியன் நிதியொதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் நோர்வே நாட் டின் 55 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் யு.என்.டி.பி. நிறுவனம் பல்வேறு வேலைத்திட்டங் களை ஆரம்பித்துள்ளதாக யாழ்.மாவட்டச் செய லக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் யு.என்.டி.பி. நிறுவனத்தினால் 10 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்ப ட்டுள்ளன.

அந்தவகையில் நண்டு பதனி டும் தொழிற்சாலை, பனம் கைப் பணி பொருட்கள் பயிற்சி நிலையம், நல்லெண்ணெய் உற்பத்தி நிலை யம், பால்பொருட்கள் உற்பத்திநிலை யம், தோற்பொருள் உற்பத்தி, கடற் பாசி உற்பத்தி, இளைஞர் யுவதிக ளுக்கான தலைமைத்துவப் பயிற் சிகள் போன்ற வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் சண்டி லிப்பாய், வேலணை, ஊர்காவற் றுறை, சங்கானை, மருதங்கேணி, பருத்தித்துறை, கரவெட்டி, காரை நகர், சாவகச்சேரி போன்ற பிரதே சங்களில் திட்டமிடப்பட்டு ஆரம்பிக்க ப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் மக்க ளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-9)

# உண்மை, நியாயம், நல்லிணக்கம் தொடர்பில் பல்துறைசார்ந்தோருக்கான கலந்துரையாடல்



இனத்துவமான ஆய்வுக்கான சர்வதேச அமையத்தின் ஏற்பாட்டில் உண்மை, நியாயம் மற்றும் நல்லிணக்கம் பற்றிய பல்துறை சார்ந்தோ ருடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் அல்பீசக்ஸ், பெரு நாட்டின் உண்மை அறியும் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணை யாளர் எட்வாடோ கொன்ஸாலெஸ் ஆகியோர் தங்களுடைய நாட்டில் போருக்கு பின்னர் எவ்வாறு மீண்டெழுந்தார்கள், எவ்வாறான செயற்பாடு களை கையாண்டு வெற்றியடைந்தார்கள் என தமது அனுபவங்களை பகிர் ந்து கொண்டனர். உண்மையை கண்டறிதல் மற்றும் நீதிக்கான போராட்டம் எனும் தொனிப்பொருளில் பல்வேறு துறைகளை சார்ந்தவர் களுடன் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மகளிர் அமைப்புக்கள், மதகுருமார், அரச உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# வீட்டு உரிமையாளரால் அவதிப்பட்ட திருடர்கள்

(கரணவாய்)

வீட்டிலுள்ளவர்கள் வெளியே சென்ற சமயம் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட நபர்கள் வீட்டு உரிமையா ளர் எதிர்பாராமல் வந்ததால் தமது துவிச்சக்கரவண்டிகளை விட்டு விட்டு தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் துன்னாலை மத்தி தாமரைக்குள பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தொலைக்காட்சி, டெக் மற்றும் பொருட்களை எடுத்து தமது சைக் கிளில் கட்டிக்கொண்டிருந்த போது வீட்டு உரிமையாளர் வருவதைக் கண்டு இரண்டு நபர்களும் தலை தெறிக்க தப்பியோடியுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலி ஸார் மோப்பநாய்களின் உதவியு டன் விசாரணைகளை மேற்கொ ண்டு வருகின்றனர். (இ-3-60)

# வீதியில் பெண்ணிடம் தங்கச்சங்கிலி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட் டைப் பகுதியில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் சென்ற இளை ஞர்களால் தங்கச்சங்கிலி ஒன்று அறுக்கப்பட்டுள்ளது. பெண்ணொ ருவர் வீதியில் நடந்து சென்று கொண் டிருந்த பொழுது மோட்டார் சைக்கி ளில் பின்னால் சென்ற இளைஞர் கள் சங்கிலியை அறுத்துக்கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை கடந்த திங்கட்கி ழமை மானிப்பாய் நவாலி வீதியில் ஆலயத்திற்குச் சென்று கொண்டி ருந்த பெண்ணொருவரின் இரண்ட ரைப் பவுண் தங்கச்சங்கிலியும் மோட் டார் சைக்கிளில் சென்ற இளைஞர்க ளால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை ஆனைக்கோ ட்டை,நவாலி,மானிப்பாய் ,சுது மலை போன்ற பகுதிகளில் நீண்ட காலமாக இவ்வாறான சங்கிலி [illegible] றும் தாலி அறுப்புச் சம்பவங்கள் நடைபெற்றவண்ணமுள்ளன.

இது குறித்து உரிய நடவடிக்கை கள் எடுக்கப்படாது இருப்பதனால் பெண்கள் வீதியில் தனியாகச் செல் வதற்கு அஞ்சுவதுடன் திருடர்கள் தமது கைவரிசையைத் தொடர்ந்து கொண்டிருப்பதற்கும் உந்துதலாக அமைந்துள்ளது என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (இ-3)

# திருவள்ளுவர் மகாசபையின் நிர்வாகக்கூட்டம் 14-ம் திகதி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருவள்ளு வர் மகாசைபையின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை பி.ப.3மணியளவில் கோண்டாவில் ஸ்ரீ நாராயணா வீதி ஐ.வைத்திலிங்கம் இல்லத்தில் நாகன் கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மகாசபைக்கு காணி பெறுவது மற்றும் வாழ்வாதார உதவி திட்டங்களை முன்னெடுப் பது தொடர்பான கலந்துரையாட ல்கள் இடம்பெறவுள்ளன. (இ-7)

# பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாம ன்றம் நடத்தும் யோகாசனமும் தியானமும் பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வு நாளை 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இல. 11, கஸ்தூரியார் ஒழுங்கையில் இடம்பெறவுள்ளது. (இ-7)

# பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப்பேருரையும் நல்லாசிரியர் விருது வழங்கும் வைபவமும்-2015

யாழ். தேசிய கல்வியியற் கல் லூரியில் வருடாந்தம் நடைபெற்று வரும் நினைவுப் பேருரை நிகழ்வில் முதலாவது நினைவுப்பேருரையாக பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினை வுப் பேருரையும் முகிழ்நிலை ஆசிரி யர் களுக்கான நல்லாசிரியர் விருது வழங்கும் வைபவமும்- 2015 நாளை 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதான மண் டபத்தில் கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர்.ப.சந் திரசேகரம் நினைவுப் பேருரை[illegible] யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வர லாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஸ் பரட்ணம் தமிழ் சிங்கள உறவுகள்– மீள்பார்வை என்னும் தொனிப் பொரு ளில் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான நல்லாசிரியர் விருதுகள் வழங்கப் படவுள்ளன. (இ-7)




# பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(இருபாலை)

கற்கரைக் கற்பக விநாயகர் திருக் கோவில் பாலஸ்தாபன கும்பாபி ஷேகவிஞ்ஞாபனம் இன்று11.06.2015 வியாழக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் வெள்ளிக் கிழமை காலை 9மணி முதல் 10 மணி வரை உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதிஷ்டா பிரதம குருவாக சிவஸ்ரீ. சி.வைத்தீஸ்வரக் குருக்கள் விளங்குகின்றார் என் பதை ஆலய பரிபாலனசபையினர் அறியத்தருகின்றனர். (இ-136)

# யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடத்தின் 2 ஆவது சர்வதேச ஆய்வரங்கம் இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடத்தின் இரண்டாவது சர்வதேச ஆய்வரங்கு இன்று 11ஆம் திகதியும் நாளை 12 ஆம் திகதியும் நடைபெற இருக் கிறது. இவ் இரண்டாவது சர்வதேச ஆய்வரங்கானது ''அறிவு மற்றும் புத்தாக்கத்தினூடாக உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்'' என்ற தொனிப் பொருளை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ளது.

இச்சர்வதேச ஆய்வரங்கிற்காக 18 தலைப்புகளில் ஆய்வறிக்கை கள் கோரப்பட்டிருந்தன.அதன் அடிப் படையில் 18 உப தலைப்புகளில்34 அமர்வுகளாக 167 ஆய்வுக்கட்டுரை கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட வுள்ளன.

முகாமைத்துவ வணிக [illegible] பேராசிரியர் தி.வேல்நம்பி [illegible] யில் இன்று 11 ஆம் திகதி வியாழக் கிழமை 8.30 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆய்வரங்குத் தொடக்க நிகழ்வுகள் கைலாசபதி கேட்போர் கூடத்தில் ஆரம்பமாக வுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந் தின ராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணை வேந்தர் சிரேஷ்ட பேரா சிரியை வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக கலாநிதி இ. பாஸ் கரன் (பிரதி ஆணையாளர் கைத் தொழில் அபிவிருத்தித் திணைக்க ளம், இந்தியா) கலந்து கொள்ள வுள்ளனர். ஆய்வரங் கத்தின் பிர தான பேச்சாளர்களாக அவுஸ்தி ரேலிய மொனாஷ் பல்கலைக்கழ கத்தைச் சேர்ந்த பேராசிரியை ரமணி சமரதுங்க மற்றும் காகில்ஸ் நிறு வன பிரதம நிறைவேற்று அதிகாரி யும் சி.ரி.கோல்டிங் பொதுக்கம்ப [illegible] கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இரண்டு நாட்களாக நடைபெற இருக்கும் இச்சர்வதேச ஆய்வரங்கின் முதல் நாளான 11 ஆம் திகதி வியாழக்கிழமை 19அமர் வுகளின் கீழ் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மாலை நேர நிகழ்ச்சியாக 5.30 மணியள வில் கலை நிகழ்வுகள் கைலாசபதி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள் ளன. இரண்டாம் நாளான 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் ''வளர்ந்து வரும் பொறுப்பு மிக்க நிர்வாகம்'' என்ற தொனிப்பொருளில் குழு நிலை கலந்துரையாடலும் அதனை தொடர்ந்து 15 அமர்வுகளில் ஆய் வுக்கட்டுரைகள் ஆய்வாளர்களி னால் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அதன் பின்னர் மாலை 3.15 மணி யளவில் நிறைவு அமர்வுகள் இடம் பெறவுள்ளன என பீடாதிபதி தி.வேல் நம்பி அறிவித்துள்ளார். (இ-5)

# வலயமட்ட போட்டிகள்

(கரணவாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்கு ட் பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட கதாபிரசங்கம், புராண படலம் ஆகிய போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை யில் நடைபெறவுள்ளது.

கோலம்போடுதல், பண்ணி சைப் போட்டி என்பன எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறுமென வடமராட்சி வலயக் கல்விப் பணி ப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள் ளார். (இ-3-60)

# சமூக நலக் கண்காட்சி

வரணி சிட்டி வேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பிரம்ம குமா ரிகள் இராஜயோகா நிலையத்தினர் பொதுமக்களின் தேவையை உண ர்ந்து வெள்ளி, சனி, ஞாயிறு (இம் மாதம் 12,13,14 ஆம் திகதிகளில்) தினங்களில் கோயில்வளாகத்தில் *சுகவாழ்வும் மன ஆரோக்கியமும்* என்ற தலைப்பிலான சமூக நலக் கண்காட்சியொன்றை ஒழுங்கு செய் துள்ளனர். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?


18
மாணவி வித்தியா

யாழ்ப்பாண நீதிமன்றம் தாக்கப்பட்டதை அடுத்து 22.05.2015 அன்று பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன், பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தனர்.

பொலிஸ்மா அதிபரின் யாழ்ப்பாண விஜயத்தின் விளைவாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் வீரசேகர, யாழ். தலைமைப் பொலிஸ் அத்தியட்சகர் வி.பாலசூரிய ஊர்காவற்றுறைதலைமை பொலிஸ் பரிசோதகர் ஆர்.பெரேரா, யாழ். பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஜே.ஏ.விஜயசேகர, யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.ஏ.கே.ஏ.சேனாரட்ண ஆகியோருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டது.



சீதுவையில் நடந்த ஆர்ப்பாட்டம்

இவை யாழ்ப்பாணத்தில் நடக்க 22.05.2015 அன்று மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிராக கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மலையகத்திலும் எதிர்ப்பு எழுந்தது.

மாவட்டம் என்ற எல்லை கடந்து மாகாணம் என்றளவில் மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடந்தமை மிக முக்கிய வரலாற்றுப் பதிவெனலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடந்ததோடு அங்குள்ள சில பாடசாலைகள் வித்தியாவுக்காக ஆத்ம இளைப்பாற்றல் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டன. இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பு நகரங்கள் வெறிச்சோடின. பாடசாலைகள் இயங்கவில்லை.

மட்டு. மாவட்டம் எங்கும் பூரண ஹர்த்தால் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட மலையகத்தில் ஆர்ப்பாட்டம், பேரணிகள் இடம்பெற்றன.


மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால்


## தமிழ் மாணவிக்கு நடந்ததை கண்டித்து சீதுவையில் ஆர்ப்பாட்டம்

மலையகத்தில் பகுதி பகுதியாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு மாணவி வித்தியாவுக்கு நீதிகிடைக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

இது இவ்வாறிருக்க 22.05.2015 அன்று வடக்கு மாகாண சபைக்கூட்டத்தொடர் இடம்பெற்றபோது மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாணவி வித்தியாவின் படுகொலைச் சம்பவம் தொடர்பான செய்திகள் ஊடகங்கள் முழுவதையும் ஆக்கிரமித்திருக்க,

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் விடயத்தில் நியாயமான முறையில் விசாரணை இடம்பெற்று நீதி நிலைநாட்டப்படுமென நீதியமைச்சர் விஜயதாஷ ராஜபக்ஷ தெரிவித்தார்.


மலையகத்தில் நடந்த ஆர்ப்பாட்டம்

22.05.2015 அன்று கொழும்பிலுள்ள தகவல் திணைக்களத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நீதியமைச்சர் மேற்போந்த கருத்தை வெளியிட்டிருந்தார்.

ஒட்டுமொத்தத்தில் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற எந்த வேறுபாடுகளும் இல்லாமல் மாணவி வித்தியாவின் படுகொலைக்கான கண்டனம் நாடு முழுவதிலும் புரையோடியிருந்தமை இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

இதேநேரம் 23.05.2015 அன்று சீதுவைச் சந்தியில் மிகப்பெரியதொரு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிராக சீதுவைச் சந்தியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் சிங்களத்தில் எழுதப்பட்ட பதாகைகள் ஏந்தப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உயர்கல்விப் பிரதியமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோவும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மாணவி ஒருவரின் கொலைக்கு சிங்கள மண்ணில் நடந்த முதலாவது ஆர்ப்பாட்டம் என சீதுவை ஆர்ப்பாட்டத்திற்கு பெயர் சூட்டமுடியும்.

ஒரு தமிழ் மாணவியின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்து சீதுவையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் உயர்கல்வி பிரதிய

டமை தமிழர் தொடர்பில் தென்பகுதி மக்களிடம் ஏற்பட்டுவரும் கருத்தியல் மாற்றம் எனக் கூறுவதில் தவறில்லை.

அதேநேரம் பெண்கள் மீதான வன்முறைகள் வேரறுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவும் சீதுவையில் நடந்த ஆர்ப்பாட்டம் அமைந்திருந்தது ஒரு புதிய மாற்றத்தின் பரிமாணம் எனலாம்.

அதாவது இன அடிப்படையிலான சிந்தனைகள் ஓரங்கட்டப்பட்டு பெண் என்ற அடிப்படையில் உரிமைக்கான குரல் எழுந்துள்ளமை வித்தியாசமானதென்று கூறுவதில் தவறில்லை. (தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சுற்றாடல் தினத்தையொட்டி

# மாணவர்களுக்கான சுற்றாடல் விழிப்புணர்வு நிகழ்வு

(கிளிநொச்சி)

**உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றாடல் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த 5ஆம் திகதி ஆரம்பமாகி இன்று நிறைவு பெறுகின்றது.**



இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி/கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் காலை 9மணிக்கு அதிபர் கி.விக்னராஜா தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உரையாற்றுகையில்,

காலணித்துவ ஆட்சிக்காலத்தில் இங்கு கொண்டுவரப்பட்டு நாட்டப்பட்ட பல பயன்தரும் மரங்கள் தற்போதும் முல்லைத்தீவு,நெடுந்தீவு ஆகிய இடங்களில் காணக்கூடியதாகவுள்ளது.

இப்பயன்தரும் மரங்களில் இருந்து குதிரைகளுக்கு உணவு கிடைக்க வழி செய்யப்பட்டது.

அத்துடன் இவை இயற்கை சமநிலையைப் பேணுவதற்கும் உதவி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஏழு பில்லியன் கனவுகள் ஒரு கிரகம் என்ற தொனிப்பொருளை முன்வைத்து தற்போதைய சுற்றாடல் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பூமி முகம் கொடுத்து வருகின்ற சூழல் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கி இவற்றின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு ஆண்டுதோறும் சூழல் தினத்திற்கான கருப்பொருள் தீர்மானிக்கப்படுகின்றது.

இதனைவிட காடுகளை அழிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்கள், ஓசோன் படலத்தில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள், இவற்றை தவிர்க்க வேண்டிய வழிமுறைகள் குறித்து மாணவர்களுக்கு விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

உலகிலுள்ள ஏழு பில்லியன் மக்களில் 800 மில்லியன் மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டு வருகின்றனர்.

சமநிலையற்ற நிலையே இதற்கு காரணம் என ஐ.நா.சபையின் அறிக்கை தெரிவிப்பதாக அவர் கூறினார்.

இவர்களால் தெரிவிக்கப்பட்ட உரைகளில் இருந்து மாணவர்களிடையே கேள்விகள் எழுப்பப்பட்டு சரியான விடைகளைக் கூறிய மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதில் கிளி/கிளிநொச்சி புனித திரேசா பாடசாலை ,கிளி/பத்திமா றோ.க.த.கலவன் பாடசாலை,கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள்,மாணவர்கள் கலந்து கொண்டனர். (2-254)

# வணிக,கலைப்பிரிவுகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் நடப்பாண்டில் க.பொ.த. (உ/த) பிரிவில் வணிக மற்றும்கலைப்பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வணிகவியல்,பொருளியல் ஆகிய இரு பாடங்களுக்கான கல்வி கருத்தரங்கும் இலவச கடந்த கால வினா விடைப்புத்தகங்களும் கொழும்பு பிரபல சட்டத்தரணி வே.தேவசேனாதிபதியின் ஏற்பாட்டில் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடக்கு மாகாணத்தில் நடப்பாண்டில் க.பொ.த.(உ/த) பிரிவில் வணிக,மற்றும் கலைப்பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்களினது சித்திவீதத்தை அதிகரிக்கும் நோக்குடன் கொழும்பு அருள் கல்வி வட்டத்தினால் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7.30மணி தொடக்கம் பிற்பகல் 2.30மணி வரை இலவசமாக கல்விக் கருத்தரங்கும் கடந்தகால வினாவிடைப் புத்தகங்களும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அன்றையதினம் காலை 7.30 மணி தொடக்கம் முற்பகல் 11மணி வரை வணிக கல்வி பாடத்தினை கொழும்பு றோயல் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.கே.சோதிலிங்கமும் முற்பகல் 11.30மணி தொடக்கம் பிற்பகல் 2.30மணிவரை பொருளியல் பாடத்தை கொழும்பு றோயல் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.கலாதரனும் வளவாளர்களாகக் கலந்து கொண்டு நடத்தவுள்ளனர்.

மேலதிக தகவல் பெற விரும்புவோர் 0778429649 (எஸ். சத்திரதரன்) எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-15)




# கிராமசேவையாளர் பிரிவுகளை அதிகரிக்குமாறு வடக்கு மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(வவுனியா)

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட சில கிராமங்களின் கிராம சேவையாளர் பிரிவுகளை அதிகரிக்குமாறு பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சை வடமாகாண சபை கோரியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 30ஆவது அமர்வு நேற்று முன்தினம் கைதடியிலமைந்துள்ள பேரவைச் செயலக கட்டடத்தில் நடைபெற்றது.

இவ் அமர்வின் போதே உறுப்பினர் எம்.பி.நடராஜினால் இக் கோரிக்கை தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரிவுகளில் தோணிக்கல்,கூமாங்குளம், ஆசிக்குளம், தவசிக்குளம் சாஸ்திரிக்கூளாங்குளம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் கிராம ங்களின் எண்ணிக்கையும் அங்குள்ள மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுவதால் அதற்கேற்ற வகையில் கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்து அக்கிராம மக்களின் வளர்ச்சிக்கு உதவி புரியுமாறு பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சை இச் சபை கோருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# செயற்கை கை அவயவம் பொருத்தும் மருத்துவமுகாம்

(கிளிநொச்சி-1)

அவுஸ்திரேலியாவில் இருந்து கொழும்பிற்கு வருகை தரவுள்ள மருத்துவ குழுவினர் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் செயற்கை அவயவம் பொருத்தும் மருத்துவமுகாம் ஒன்றை கிளிநொச்சி பழைய வைத்தியசாலையில் அமைந்துள்ள செயற்கை அவயவம் பொருத்தும் நிலையத்தில் வைத்து நடத்தவுள்ளனர்.

எனவே செயற்கை அவயவம் பொருத்த வேண்டியவர்கள் நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை இயன் மருத்துவ பிரிவில் முற்பகல் 10 மணிக்கு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி பொது வைத்தியசாலை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (2-277)

# வீதிகள் புனரமைக்கப்படாதுவிடின் போக்குவரத்துக்கள் தடைப்படும்

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கான பிரதான வீதி முதல் ஏனைய சிறு வீதி வரை புனரமைக்கப்படாத நிலையில் மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவதுடன் மழைகாலங்களில் போக்குவரத்துக்களும் தடைப்படும் நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக வன்னியன் குளம் சந்தியில் இருந்து அம்பாள்புரம், கொல்லவிளாங் குளம் பாலிநகர் ஊடாக செல்வபுரம், பாண்டியன் குளம் , நட்டாங்கண்டல்,பனாங்காமம், மூன்று முறிப்பு வரை செல் லும் வீதி மற்றும் யோகபுரம் சந்தி யில் இருந்து பாலியாறு கரும் புள்ளியான் ஊடாக செல்லும் வீதிகளே இவ்வாறு மிக மோசமாக காணப்படுவதனால் தற்போது இவ்வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதுடன் மழைகாலங்களில் குழிகளில் மழைநீர் தேங்கி காணப்படுவதுடன் பயணிக்க முடி யாத நிலை காணப்படுகின்றது. எனவே வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2)

# நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்திய நான்கு மீனவர்கள் கைதாகினர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நந்திக்கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட முக்கூட்டு வலைகள், தங்கூசி வலைகள் ஆகியவற்றை பயன்படுத்தி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட நான்கு மீனவர்கன் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பாவித்த வலைகள் கைப்பற்றப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு நீதவானின் உத்தரவுக்கமைய அவை அழிக்கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும் முல்லைத்தீவு கடற்படையினரும் கூட்டாக இணைந்து நேற்று அதிகாலை 3 மணியிலிருந்து காலை 8 மணிவரை நந்திக்கடல் பகுதியில் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர்.

இந் நடவடிக்கையின் போது தடைசெய்யப்பட்ட முக்கூட்டு வலைகள்,தங்கூசி வலைகள் ஆகியவற்றை பாவித்துக் கொண்டிருந்த 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்த மேற்படி வலைகளும் கைப்பற்றப்பட்டன.

அன்றைய தினமே அவர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட, தடை செய்யப்பட்ட வலைகளும் ஒப்படைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது இரு மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் அவர்களிடமிருந்து குற்றப்பணமாக தலா 5ஆயிரம் ரூபா அறவிடப்பட்டு எச்சரிக்கப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

குற்றத்தை ஒப்புக்கொள்ளாத மற்றைய இரு மீனவர்களின் வழக்குகளும் எதிர்வரும் ஜூன் மாதம் 13ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என நீதிபதி அறிவித்துள்ளார் என்றுஅவர் மேலும தெரிவித்தார். (2)

## பொதுக்கூட்டம்


(முல்லைத்தீவு)

மு/வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

எனவே அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் செ.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இரத்தின தீபம்' விருது வழங்கி கௌரவிப்பு



கிளிநொச்சி மாவட்டதென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரும் உதவி முகாமையாளர்–தொழில் நுட்பம், அகில இலங்கை சமாதான நீதவானுமான ஜெ.சத்தியேந்திரனிற்கு சிறந்த சமூக சேவைக்கான 'இரத்தின தீபம்' எனும் விருது வழங்கப்பட்டுள்ளது.

கண்டி மலையக கலை,கலாசார சங்கமும் யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கம், சனசமூகநிலையமும் இணைந்து 07.06. 2015இல் நடத்திய சான்றோர் கௌரவிப்பும் 'இரத்தினதீபம்' விருது வழங்கல் நிகழ்வில் வைத்து இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜனினால் வழங்கி வைக்கப்பட்டது.

இவர் ஏற்கனவே 'விஸ்வ கீர்த்தி' எனும் விருதினையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)




### மாங்குளம் புகையிரத நிலையத்தில்

# புகையிரதங்கள் நிறுத்தப்பட்டு பயணத்தை தொடர வேண்டும்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாங்குளம் புகையிரத நிலையத்தினை 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்டது போன்று அமைக்குமாறும் இந்நிலையத்தில் அனைத்து புகையிரதங்களும் நிறுத்தப்பட்டே செல்ல வேண்டுமெனவும் வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

வடக்கு மாகாண சபையின் 30 ஆவது அமர்வு அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று முன்தினம் கைதடியிலமைந்துள்ள பேரவைச் செயலக கட் டடத்தில் நடைபெற்றது.

இவ் அமர்வின் போதே மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதனினால் மேற்படி விடயம் பிரேரணையாக முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட் டுள்ளது.

அப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு புகையிரத நிலையம் மாங்குளம் புகையிரத நிலையமாகும்.1990 ஆண்டிற்கு முன்பு சகல வசதிகளுடனும் இந்நிலையம் இயங்கியது.சகல புகையிரதங்களும் இந்நிலையத்தில் நிறுத்தப்பட்டுச் சென்றன.

இந்நிலையத்தில் பயணிகளுக்கான அனுமதிச்சீட்டு பதிவு செய்யும் வசதியும் இருந்தது.

புகையிரதங்களை மையப்படுத்தி முல்லைத்தீவில் இருந்தும் துணுக்காயில் இருந்தும் பேருந்து சேவைகள் இயங்கின. ஆனால் தற்பொழுது கடுகதிப் புகையிரதங்கள் நிறுத்தப்படுவதில்லை.

மாங்குளத்திலிருந்து புகையிரதங்களை மையப்படுத்தி இணைப்பு பேருந்து சேவைகள் நடத்தப்படுவதில்லை.பயண அனுமதிச்சீட்டு பதிவு செய்தல் முறை இல்லை. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வரவேண்டிய பயணிகள், மாங்குளத்தில் புகையிரத நிலையம் இருந்தும் வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் இறங்கி பேருந்து மூலம் முல்லைத்தீவு மாவட்டத்திற்குப் பயணம் செய்கின்றனர்.

எனவே மாங்குளம் புகையிரத நிலையத்தை வவுனியா, கிளிநொச்சி புகையிரத நிலையங்களிற்கு சமமாகத் தரமுயர்த்த வேண்டும் என்றும் 1990 ஆம் ஆண்டிற்கு முன் இருந்த வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று புகையிரத திணைக்களத்தையும் இணைப்பு பேருந்து சேவைகளை ஏற்படுத்த வேண்டும் என்று இலங்கைபோக்குவரத்து சபையையும் இச்சபை கோருகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

## வேலைகள் முழுமையாக நிறைவடைந்தும் மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை

### பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆதங்கம்

(முக்கொம்பன்)

முறிகண்டி வசந்த நகர் கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான அனைத்து வேலைகளும் பூர்த்தி அடைந்தநிலையிலும் இதுவரை மின்விநியோகம் வழங்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேறி 5வருடங்கள் கடந்த நிலையிலும் எமது கிராமம் இரவுவேளைகளில் இருள்சூழ்ந்து காணப்படுகின்றது. அத்துடன் 150 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இக்குடும்பங்களில் வசிக்கின்ற பாடசாலை செல்லும் மாணவர்கள் இரவு வேளைகளில் குப்பி விளக்கிலேயே கல்வி கற்று வருகின்றனர்.


குறித்த கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு வயர்கள் பொருத்தப்பட்டு மின்பிறப்பாக்கியும் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது அனைத்து வேலைகளும் பூர்த்தி அடைந்தும் வீடுகளுக்கு மின்சா ரம் வழங்கப்படவில்லை.

அயல் கிராமங்களான சாந்தபுரம், இந்துபுரம் என்பவற்றிற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்கின்ற நிலையில் எமது கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு கால தாமதம் ஏற்படுவது ஏன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.


எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கால தாமதமின்றி மின்சாரத்தை வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென அக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-283)



கனடா அரும்புகள் அமைப்பு மு/ விசுவமடு நெத்திலியாறு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான உதவிகளை அண்மையில் வழங்கியதைப் படத்தில் காணலாம்.

## இரணைமடு குளத்தைப் புனரமைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்

### கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவிப்பு



கிளிநொச்சி மாவட்ட மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்கின்ற முக்கிய குளமாக இரணைமடுக்குளம் இருப்பதன் காரணமாக குளத்தை அபிவிருத்தி செய்வதும் பராமரிப்பதும் எல்லோருடைய பொறுப்பாகுமென கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இரணைமடுக்குள அபிவிருத்தித் திட்டங்களின் மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், "கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு இரணைமடுக்குளம் முக்கிய பங்கு வகிக்கின்றது. பல வருடங்களாக இக்குளம் புனரமைக்கப்படாமலுள்ளது. எனவே, எதிர்காலத்தில் இந்தக் குளத்தை புனரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன அதிகாரிகள், குளத்தின் வேலைத்திட்டங்களில் பங்குகொள்கின்ற திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (2)

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

## 169 காணிகள் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடமாடும் சேவை

(மல்லாவி)

மத்திய அரசாங்க மற்றும் வடக்கு மாகாண சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தீர்க்கப்படாத 169 காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடமாடும் சேவையொன்று நாளை வெள்ளிக்கிழமை மறுநாள் சனிக்கிழமை ஆகிய இரு தினங்கள் காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரைர முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலக பிரிவுகளில் தீர்க்கப்படாதுள்ள 169 காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு மத்திய அரசு மாகாண சபை ஆகியவைஇணைந்து தீர்வு காணும் காணி தொடர்பான நடமாடும் சேவை நடை பெறவுள்ளது.

இதில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 32, மாந்தை கிழக்கில் 17, கரைதுறைப்பற்று 25, புதுக்குடியிருப்பு 65, ஒட்டுசுட்டான் 30 என ஐந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் மொத்தம் 169 காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு அன்றைய தினங்களில் தீர்வு காணப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடமாடும் சேவையில் ஆணையாளர் நாயகம், காணி திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பல காணி தொடர்பான அரச அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறந்த வில்லாளி

முல்லை நாட்டு இள வரசன் ஜெயவீரன், குரு குலத்தில் பயிற்சி முடிந்து நாட்டுக்குப் புறப்பட்டான்.

அவன் மிகவும் சிறந்த வில்லாளி.

அவன் தன் ஊருக்கு வரும் வழியில், ஓர் அடர்ந்த காட்டைக் கடக்க வேண்டியிருந்தது.

பாதி வழியிலேயே இருட்டிவிட கொடிய மிருகங்கள் நிறைந்த அக் காட்டில், இரவு நேரத்தை எப்படிக் கழிப்பது என்று சிந்தித்தான் ஜெயவீரன்.

பின்னர் ஒரு பெரிய மரத்தின் மேல் ஏறிக் கொண்டான்.

சற்று நேரத்தில் சிறிது தொலைவில் நெருப்பு எரிவது தெரிந்தது.

அருகில் சென்று பார்த்தான். மூன்று அரக்கர்கள், தோலுரித்த ஆடு ஒன்றைத் தீயில் வாட்டிக் கொண்டிருந்தனர்.

மேலும் மூன்று ஆடுகள் அவர்கள் அருகில் இருந்தன.

வாட்டிய ஆட்டு மாமிசத்துண்டு ஒன்றை சுவைப்பதற்காக வாயருகே கொண்டு சென்றான் மூவரில் ஒருவன்.

சட்டென்று புதரில் மறைந்து கொண்ட ஜெயவீரன், மாமிசத் துண்டைக் குறிபார்த்து அம்பை விட்டான்.

அந்தோ பரிதாபம்! அவன் கையிலிருந்த மாமிசத் துண்டு பறந்து போனது.

பார்த்தீர்களா, பார்த்தீர்களா? என மாமிசத் துண்டு காற்றில் பறந்து செல்கிறது.

காற்றே அடிக்கவில்லையே, எப்படி பறந்து போகும்?

காற்று அடிக்காவிட்டாலும் இந்தக் காட்டில் மாமிசம் பறக்கும் என்று இப்போதுதான் தெரிகிறது என்றான் அவன்.

இப்போது பார்! காற்றும், காடும் என்னை என்ன செய்துவிடும்? என்றபடி, ஆட்டின் மறு மாமிசத் துண்டைக் கைகளால் இறுகப் பற்றி, மாமிசத்தை வாயருகில் கொண்டு சென்றான் மற்றொருவன்.

ஜெயவீரன் விட்ட அம்பால், அவனது மாமிசத் துண்டும் பறந்து போய்விட்டது.

ஐயய்யோ! இது என்ன மாயாஜாலமாக இருக்கிறது. காற்று அடிக்காமலேயே கறித்துண்டு பறக்கிறது என்றான்.

மூன்றாவது ஆள் ஆட்டின் தலையை எடுத்தான். அவன் எடுத்த மாத்திரத்திலேயே அதுவும் பறந்தது.

அவர்கள் மூவரும் பேய், பேய்! என்று கத்திக் கொண்டு ஓட ஆரம்பித்தனர்.

ஓடாதீர்கள். நில்லுங்கள். உங்கள் மாமிசத் துண்டுகளைப் பறித்தது நான்தான். உங்களால் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது.

ஆனால், நான் அம்பு ஒன்றை விட்டேனென்றால் உங்கள் மூவரின் தலைகளும் மண்ணில் உருளும் என்றபடி அம்பை எடுத்தான்.

ஐயய்யோ! எங்களைக் கொன்று விடாதே. நாங்கள் உனக்கு அடிமை என்ற அவர்கள் கீழே விழுந்து வணங்கினர்.

ஏன் இங்கே வந்தீர்கள்?

இந்த மலைக்கு அப்பால் ஒருநாடு இருக்கிறது. அங்கே ஓர் அழகான இளவரசி இருக்கிறாள். அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறோம்.

ஆனால், அவளை ஒரு பயங்கரமான நாய் பாதுகாத்து வருகிறது. நெருங்க முடியவில்லை.



போயும் போயும் ஒரு நாய்க்கா இவ்வளவு பயப்படுகிறீர்கள்? என்னுடன் வாருங்கள். நாயைக் கொன்றுவிடுகிறேன்.

மறுநாள் இரவு அந்த மூவரும் மலைக்கு அப்பால் உள்ள அந்த நாட்டிற்குச் சென்றனர்.

இளவரசியின் மாளிகையில் அவளைக் காவல் காத்துக் கொண்டிருந்த அந்தக் கொடூரமான நாய், இவர்களைப் பார்த்ததும் பாய்ந்து ஓடி வந்தது.

ஜெயவீரன் ஓர் அம்புவிட்டான். அந்த அம்பு, நாயின் மண்டையைப் பிளந்தது. அந்த இடத்திலேயே நாய் சுருண்டு விழுந்து இறந்தது.




- 1774 - அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியேர்சிலிருந்து பிரெஞ்சு இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி யூதர்கள் அங்கிருந்து வெளியேறினர்.
- 1788 - ரஷ்ய நாடுகாண் பயணி கெராசிம் இஸ்மாயிலொவ் அலாஸ்காவை அடைந்தார்.
- 1805 - மிச்சிகனில் டிட்ராயிட் நகரத்தின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.
- 1837 - பொஸ்டனில் ஆங்கிலேயர்களுக்கும் ஐரிய மக்களுக்கும் இடையில் கலவரம் மூண்டது.
- 1901 - நியூசிலாந்து தன்னுடன் குக் தீவுகளை இணைத்துக் கொண்டது.
- 1935 - அமெரிக்கக் கண்டுபிடிப்பாளரான எட்வின் ஆர்ம்ஸ்ட்ரோங் உலகின் முதலாவது தனது பண்பலை ஒலிபரப்பை நியூ ஜேர்சியில் அறிமுகப்படுத்தினார்.
- 1937 - சோவியத் ஒன்றியத்தில் எட்டு இராணுவத் தலைவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1938 - இரண்டாம் சீன-ஜப்பானியப் போர்: ஜப்பானியப் படைகளை எதிர்கொள்ள சீன அரசு மஞ்சள் ஆற்றை பெருக்கெடுக்க விட்டதில் 500,000 முதல் 900,000 வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய விமானங்கள் இத்தாலியில் ஜெனோவா மற்றும் டூரின் நகர்கள் மீது குண்டுகளை வீசின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: மால்ட்டா மீது முதற தடவையாக இத்தாலிய விமானங்கள் தாக்குதலை நடத்தின.
- 1963 - தெற்கு வியட்நாமில் மத விடுதலையை வலியுறுத்தி திக் குவாங் டுக் என்ற பௌத்த மதகுரு தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டார்.
- 1981 - ஈரானில் 6.9 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 2,000 வரையில் கொல்லப்பட்டனர்.
- 2002 - அன்டோனியோ மெயூச்சி என்பவரே தொலைபேசியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் என ஐக்கிய அமெரிக்கக் காங்கிரசினால் அறிவிக்கப்பட்டார்.
- 2004 - நாசாவின் கசீனி-ஹியூஜென்ஸ் விண்ணுளவி சனிக் கோளின் ஃபீபி துணைக்கோளை அண்டிச் சென்றது.
- 2007 - கடும் மழை, வெள்ளம் காரணமாக வங்காள தேசத்தில் 118 பேரும் தெற்கு சீனாவில் 66 பேரும் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- **1838 - எம். சி. சித்திலெப்பை, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1898)**
- 1908 - சோ. இளமுருகனார், ஈழத்துப் புலவர் (இ. 1975)
- 1947 - லாலு பிரசாத் யாதவ், இந்திய அரசியல்வாதி
- 1957 - சுகுமாரன், தமிழகக் கவிஞர்

**இறப்புகள்**

- 1994 - அ. துரைராசா, பேராசிரியர், நாட்டுப்பற்றாளர், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பி. 1934)
- 1995 - பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழ்த் தேசியத்தந்தை (பி. 1933)
- 1993 - லெப்டினண்ட் கேணல் சாள்ஸ், கடற்புலிகளின [illegible] (பி. 1960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முகம்மது காசிம் சித்திலெப்பை



முகம்மது காசிம் சித்திலெப்பை, 1833 ஆம் ஆண்டில் இந்நாட்டின் முதல் முஸ்லிம் வழக்கறிஞரான முகம்மது லெப்பையின் மகனாக 1838 ஜூன் 11 இல் கண்டியில் பிறந்தார்.

இவர் மரைக்காயர் நவீன உரை நடை இலககியத்தில் முன்னோடிப் படைப்பாளிகளில் முக்கியமானவர். அவரது இயற்பெயர் முகம்மது காசிம்.

இலங்கை முஸ்லிம்களைக் குறிப்பாகக் கல்வித்துறையில் விழிப்புணர்ச்சியடையச் செய்ய அரும்பாடுபட்ட ஈழத்து எழுத்தாளர்.

மறுமலர்ச்சித் தந்தை என அழைக்கப்படுபவர். பாடசாலைகளை நிறுவியும், பாடநூல்களை எழுதியும் செயலாற்றினார். ஈழத்தின் முதலாவது தமிழ் நாவலான ***அசன்பே சரித்திரம்*** என்ற நாவலை எழுதியவர். இவர் ஈழ இஸ்லாமியர்களின் உரிமைக்காக வாதாடும் ***முஸ்லிம் நேசன*** என்ற இதழை நடத்தியவர். இவர் சட்டவல்லுனரும், பத்திரிகையாளரும், கல்வியாளரும், சமூக சேவையாளரும் ஆவார். 1864 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக உயர் நியமனம் பெற்ற சமகாலத்தில் பிரசித்த நொத்தாரிசாகவும் பணிபுரிந்த இவரால் எழுதப்பட்ட காணி உறுதிகள் பல இன்றும் பலரிடம் உள்ளதாக அறியமுடிகிறது. இவர் தமது பிற்கால வாழ்க்கை முழுவதையும் தமது சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் செலவிட்டார்.

இலங்கை சட்ட நிர்ணய சபையில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் இருத்தல் அவசியமென்று இடையறாது வன்மையாகப் போராடினார். இதன் பயனாக 1889 ஆம் ஆண்டில் இஸ்லாமியர் இருவர் நியமன உறுப்பினராக அங்கத்துவம் பெற்றனர்.

இலங்கை முஸ்லிம்களின் நன்மைக்கான எந்தச் சட்டத்தையும் முழுமூச்சுடன் ஆதரித்து வந்தார். முஸ்லிம் விவாகப் பதிவுச் சட்டத்தை பழமை விரும்பிகள் எதிர்த்தபோது சித்திலெப்பை வரவேற்றார். அத்துடன் இது விடயத்தில் தமது முழு ஆதரவையும் அரசாங்கத்திற்கு நல்கினார்.

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

152



**...'கதையின் கதை**

**கோவிலுக்கு வந்த நல்ல செய்தி**

'ஆப்த மித்ரா' ரிலீசானதும் கேரளாவில் உள்ள சக்குளத்து பகவதி அம்மன் கோவிலுக்கு போனேன். இது 'பெண்களின் சபரிமலை' என்று சொல்லப்படும் கோவில். தரிசனம் முடிந்து வெளிவந்த நேரத்தில் கோவில் குருக்கள் என்னிடம், '27 வெள்ளிக் கிழமை தொடர்ந்து வாங்க. நல்ல செய்தி வரும்' என்றார்.

அவர் சொன்னபடி 27 ஆவது வெள்ளிக் கிழமை தரிசனம் முடித்துவிட்டு குருவாருக்கு வந்தேன். மதியம் 1 மணிக்கு பிரபு சார் போனில் பேசினார். 'யப்பா! ஒரு சந்தோஷமான விஷயம். ரஜினிசார் நம்ம பேனர்ல ஒரு படம் பண்றார்' என்றார்.

இதைக் கேட்டதும் எனக்கு பெரிய மகிழ்ச்சி. உடனே பிரபுவிடம், 'ரொம்ப சந்தோஷமான விடயம் சொல்லியிருக்கீங்க' என்றேன்.


'சந்தோஷம் இதோடு முடிந்து விடவில்லை. படத்தை நீதாம்ப்பா டைரக்ட் பண்றே' என்றார்.

'நானா?' ஒரு கணம் எனக்கு இன்ப அதிர்ச்சி. உடனே பிரபு, 'ரஜினி சாரே சொன்னார். உன்னைத்தான் நம்ம பேனர் படத்துக்கு டைரக்டரா போடணும்னு கேட்டுக் கிட்டார்' என்றார்.

இப்போது நிஜமாகவே எனக்கு வியப்பு. நான் அவரை 'மன்னன்' படத்தில் இயக்கி 9 வருடம் ஆகிவிட்டது. அதற்குப்பிறகு அது மாதிரி ஒரு பெரிய வெற்றிப்படம் எதுவும் நான் கொடுக்கவில்லை. அப்படியிருந்தும் ரஜினி சார் என்னை அவர் நடிக்கும் புதிய படத்தை இயக்க சொல்லியிருக்கிறார் என்றால், எப்படி? 'ஆப்த மித்ரா' ரிலீசாகி முதல் வாரமே பெரிய வெற்றிக்கான அடையாளம் தெரிய ஆரம்பித்திருந்தது. இந்த நேரத்தில் சிவாஜி பிலிம்சுக்காக ரஜினி நடிக்கும் படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்ததில், வரும் வழியிலேயே ரஜினி சாருக்கு என்ன கதை பண்ணலாம் என்று யோசிக்கத் தொடங்கி விட்டேன். அப்போது என்னிடம் 'வலது கை' என்ற பெயரில் ஒரு 'கமர்ஷியல்' கதை இருந்தது. இந்தக் கதைக்குள் ரஜினி எந்தெந்த மாதிரி பிரகாசிப்பார் என்று கதைக்காட்சிகளை மனக்கண் முன் ஓடவிட்டேன்.

சென்னை வந்து ராம்குமாரை பார்த்தபோது, 'யப்பா! ரஜினி சாரே போன் செய்தார். நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் சாப்பாட்டு வேளை, திடீர்னு ரஜினிசாரிடமிருந்து போன். 'என்ன பண்றீங்க?' என்று கேட்கிறார். 'சாப்பிட்டுக்கிட்டு இருக்கிறோம்' என்றேன். 'நம்ம பேனர்ல ஒரு படம் பண்ணுவோமா?' என்கிறார். 'பண்ணலாம் சார்' என்கிறேன். உடனே அவரே 'வாசு டைரக்ஷன்ல 'ஆப்த மித்ரா' ன்னு ஒரு படம் வந்திருக்கு. நாம அதை அப்படியே தமிழில் பண்ணலாம்' என்றார். 'சந்தோஷமா பண்ணலாம் சார்'னு சொல் லீட்டேன் என்றார், ராம்குமார்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-161**

**...ஆம்பளச்சாமிகளா! பொம்பளச் சாமிகளா! எல்லாம் தொலஞ்சு எல்லாம் கழிஞ்சு ஏம் பொழப்புல ஈவுன்னு நான் மிச்சம் வச்சிருக்கிறது ஒத்தையில பெத்த ஏம் பிள்ள ஒண்ணுதான்.**

ஏம் பிள்ளையப் பெராந்து தூக்கிட்டுப் போயிராமக் காபந்து பண்ணிக் கரைசேத்துருங்க.

குத்துக் கல்லக் கண்டாலும் கும்புட்டுக் காலுக்க விழுந்திர்றா கருவாச்சி.

ஆனா ஆத்தாள ஆத்துல விட்டுட்டு அவன் போக்குல போயிக்கிட்டிருக்கான் மகன் காரன்.

பெரும்பாதையை விட்டுப் பிரிஞ்சு ஓடி ஒதுங்கி ஒடுங்கிக் கண்காணாத காட்டுக்குள்ள காணாமப் போகுதா இல்லையா ஒத்தையடிப் பாதை... அப்படி ஆத்தா பிடிய விட்டு வெலகி வெலகி வெளிய வெகுதூரம் போறான் பய.

ஆத்தா என்ன செஞ்சாலும் அது சொத்த இது சொத்தைங்குறான்.

இல்லாத நொட்டச் சொல்லெல்லாஞ் சொல்லி ஆத்தாளக் கிறுக்குக் குத்துறான்.

அன்னைக்குக் களிக்கிண்டிக் கருவாட்டுக் குழம்பு வச்சதுல ஒரு கூத்தாகிப் போச்சு.

மீனாட்சின்னா மூக்குத்தி; கண்ணகின்னா செலம்பு; வேலுநாச்சின்னா கத்தி; ஆண்டாள்ன்னா மால; பாஞ்சாலின்னா சீலங்கிற மாதிரி கருவாச்சின்னா ஞாபகம் வாரது கருவாட்டுக் குழம்பு தான்.

கருவாட்டுக் குழம்பு வைக்கிறதுல சில்லாவுல அவள அடிக்க ஆள் கெடையாது.

அவ கைப்பதம் யாருக்கும் வாரது. பாதகத்தி குழம்பு வச்சா கருவாடு மீனாப்போகும்; கத்திரிக்கா தேனாப் போகும்.

அம்மியில மஞ்ச மொளகா வச்சு அரச்சு, தேங்காயில ஒரு எளஞ்சில்லு எடுத்து நச்சுன்னு நசுக்கி சின்ன வெங்காயம் ரெண்டெடுத்து மேல் தோல செல்லமா ஒரு உரி உரிச்சு, பெத்த பிள்ளைய அடிக்கி மாதிரி பொத்துனாப் புல ரெண்டு தட்டுத் தட்டிக் கொழவிய இழுத்து அரைச்சு அரைச்சத ஒண்ணு தெரட்டி, அதுல அறுத்து வச்ச கத்திரிக் காயையும் கருவாட்டையும் உப்பையும் போட்டு அஞ்சு விரலையும் விட்டுப் பிசைஞ்சு அளந்து தண்ணி வச்சு அடுப்புக் கூட்டி, அங்கிட்டும் இங்கிட்டும் போகாம அங்கேயே இருந்து அளவாத் தீ எரிச்சு, ஒரு கொதி ரெண்டு கொதிவிட்டு மூணாங்கொதி கொதிச்சு அடங்கப் பொருந்தப் புளியக் கரைச்சு ஊத்தி, நாலாங் கொதி கொதிக்க நறுக்கா எறக்கி வைக்கிறது தான் ஊர் நாட்ல கருவாட்டுக் குழம்புக் குண்டான கம்ப சூத்தரம். இப்படித் தான் வைப்பாக எல்லாரும். இதுக்கெல்லாம் மேல கருவாட்டுக் குழம்புக்கு யாரும் பாக்காத ஒரு பண்டுதம் பாப்பா கருவாச்சி. (தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலையின் தலையை மட்டும் வெட்டிவிடுங்கள்


## மிரட்டிய பொலிஸ்

பிரபாகரன் சிலையை அகற்றி, ஒட்டுமொத்த தமிழின உணர்வாளர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்து விட்டது ஜெ. அரசு. நாகை மாவட்டம் வேளாங்கண்ணி அருகேயுள்ள தெற்கு பொய்கைநல்லூர் கிராமத்தில் அகற்றப்பட்ட பிரபாகரன் சிலையை மீண்டும் நிறுவ வேண்டும் என வைகோவும் ராமதாஸும் களத்தில் இறங்க, அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு கூடியது.



கடந்த 4 ஆம் திகதி தங்களின் குலம் காக்கும் தெய்வமான பேச்சியம்மன் கோயிலைப் புதிதாகக் கட்டிய தெற்கு பொய்கை நல்லூர் கிராமத்தினர், ஊர் வழக்கப்படி, கோயிலைப் பாதுகாக்கும் குதிரை வீரன் சிலை அமைத்தனர். போர் வீரன் உடையில் சிலையாக அவர்கள் வடித்திருந்தது விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் உருவத்தை என்பது தான் விவகாரத்துக்குக் காரணம்.

சிலை அகற்றப்பட்ட பின்பு...



பிரபாகரனுக்கு சிலை என்ற செய்தி வாட்ஸ்அப்பில் உலகத் தமிழர்களின் மத்தியில் பரவியது. பிரபாகரனுக்குச் சிலை என்ற செய்தி பரவவே லண்டனிலும், இலங்கையிலும் தமிழர்கள் இனிப்புகள் வழங்கி கொண்டாடியிருக்கிறார்கள். இந்தச் செய்தி மத்திய, மாநில அரசின் உளவுத் துறையினரின் காதுகளுக்கும் எட்டியது. அடுத்த நிமிடமே அந்தச் சிலையை அகற்றுவதற்கு ஆணையும் பிறப்பித்திருக்கின்றன இந்திய, தமிழக அரசுகள்.

கும்பாபிஷேகம் நடந்து முடிந்த அதே நாள் இரவு 12 மணி. அசதியில் தூங்கிக் கொண்டிருந்த தெற்கு பொய்கை நல்லூர் கிராமத்தினரைக் தட்டி எழுப்பியது பொலிஸ். கிராமத்தினரை ஒன்றாகக் கூடும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். எல்லோரும் ஒன்றாகக் கூடுவதற்குள் பொலிஸார் தங்களின் அதிரடிகளைக் காண்பித்திருக் கிறாரகள்.

தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தலைவருடைய சிலையை வைக்கக் கூடாது என்பது உங்களுக்குத் தெரியாதா? சிலையின் தலையை மட்டும் வெட்டி எடுத்து விடுங்கள்' என்று பொலிஸார் எச்சரித்திருக்கிறார்கள். 'குதிரை வீரனின் வண்ணத்தை மாற்றிக்கொள்கிறோம்' என்று கெஞ்சிக் கேட்டிருக்கிறார்கள் மக்கள். ஒரு கட்டத்தில் பொலிஸாரே சிலையை இடித்துத் தள்ளிவிட்டு, அங்கிருந்து கிளம்பியிருக் கிறார்கள்.

தெற்கு பொய்கை நல்லூர் கிராமத்தினரிடம் பேசினோம். "100 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது தான் எங்கள் குல தெய்வத்துக்குக் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்திருக்கிறோம்.

இந்த அளவுக்குப் பெரிய பிரச்சினையாக வெடிக்கும் என்பது எங்களுக்குத் தெரியாது. எங்கள் ஊர் மக்கள் சேர்ந்து 100, 50 ரூபாய் போட்டு இதைக் கட்டினோம். இப்போது இடித்து விட்டார்கள். குதிரைக்குப் பாகனாக சிலை வைக்க வேண்டும் என்றால் அதற்கு மக்களின் காவலனாகவும் இனத்தின் காவலனாகவும் இருந்த ஒருவரைத்தான் வைக்க முடியும். அப்படி நினைத்துத்தான் அவருடைய சிலையை நாங்கள் வைத்தோம். காக்கிச் சட்டைப்போட்ட ஒருவரைச் சிலையாக வைக்கலாம் என்று அனுமதி இருக் கிறது. அந்த அடிப்படையில்தான் மிலிட்டரி டிரஸ்ஸில் ஒரு வீரனை போருக்குப் போவதுபோல சிலையாக வடிவமைத்தோம். பிரபாகரன் சிலை வைக்கக் கூடாது என்றால், பிரபாகரன் ஸ்டிக்கர் ஒட்டுவது, டி.வி-யில், பேப்பரில் விளம்பரம் போடுவதை எல்லாம் அரசு தடை விதிக்கவில்லையே?

காமேஸ்வரத்தை சேர்ந்த அப்பு என்பவர்தான் (அப்பு என்பவர் நாம் தமிழர் கட்சியின் கீழ்வேலூர் மாவட்டச் செயலாளராக இருக்கிறார்.) இப்போது பேட்டி கொடுக்கிறார். கும்பாபிஷேகத்தைப் பற்றி வாட்ஸ்அப்பில் செய்தியாகப் பரப்பி, எங்களை வேண்டும் என்றே மாட்டிவிட்டிருக்கிறார். அவர் யார் என்றே எங்களுக்குத் தெரியாது. அவர்தான் இதை அரசியலாக்கப் பார்க்கிறார். இப்போது நாங்கள் அவர்மேல்தான் வழக்குப் பதிவு செய்யச் சொல்லி புகார் கொடுக்கப் போகிறோம்" என்று விரக்தியுடன் பேசினார்கள்.


"பிரபாகரன் சிலையை அகற்றிவிட்டு வேறு சிலையை வைத்துக்கொளளுங்கள் என்று சொன்னோம். அதை ஏற்றுக் கொண்டு அவர்களாகவே அதை அகற்றி விட்டார்கள்" என்றார் தனிப்பிரிவு பொலிஸ் அதிகாரி தியாகராஜன்.


நாகை மாவட்ட ஆட்சியர் பழனிச்சாமி, "நாங்கள் அதை விசாரித்துக்கொண்டிருக்கிறோம். ஐயனார் கோயில் என்றால் குதிரை வீரன் ஒருவன் கயிற்றைப் பிடித்தபடி இருப்பதாகச் சிலை வைப்பார்கள். அப்படி பொதுவாக வைத்தால் பிரச்சினை இல்லை. பிரபாகரன சிலையை வைப்பதற்கு அனுமதிக்க முடியாது. தாசில் தார் முன்னிலையில் விசாரிக்கச் சொன்னேன். விளக்கத்தை ஏற்று அந்தக் கிராமத்தினரே சிலையை அப்புறப் படுத்தி விட்டனர்" என்றார்.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று கற்பூரத் திருவிழா





உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல முருகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் குறை நீக்கி அருள்புரிய எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் தான் நல்லூர் கந்தசுவாமி கோயில்.

இந்தக் கோயிலில் இன்று கற்பூரத் திருவிழா மகா கும்பாபிஷேக தினமான இன்று பகல் கந்தப் பெருமானுக்கு 1008 சங்குகளால் ஆனந்த அபிஷேகம்.

இந்த சங்காபிஷேகத்தைக் காண்பதற்காக யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் இங்கு திரளாக வந்து கூடுவார்கள். நல்லூர் முருகனுக்கு அலங்காரக் கந்தன் என்று பெயருண்டு. வித விதமான அலங்காரத்துடனே எழுந்தருளி திருவீதியுலா வந்து காட்சி கொடுக்கின்ற கந்தன் இன்று தமது அருட்சக்திகளான வள்ளி தெய்வானையுடன் அழகே ஓர் உருவெடுத்தாற் போன்று அழகிய பீடத்திலே ஆறுமுகப் பெருமானாக எழுந்தருள்கின்றார்.

இன்று நல்லூரிலே திருக்கல்யாணமும் நிகழவுள்ளது. மணவாளக் கோலத்திலே மால்மருகன் அடியார்க்கருளும் ஆறுமுகன் ஆனந்த கோலாகலமாக அருட்காட்சி தரும் அழகைக் காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

மாப்பிள்ளைக் கோலத்திலே ஷண்முகப் பெருமான் நடுநாயகமாக வீற்றிருக்க மணப்பெண்கள் வள்ளியும் தெய்வானையும் புத்தாடை சரசரக்க தங்க நகைகள் அங்கமெல்லாம் மின்னி ஒளி பிறக்க அழகுத் திருமேனியுடன் அடியார்களுக்கு அற்புதக் காட்சி தரும் பாங்கு பக்தி பூர்வமானது.

எமது யாழ்ப்பாணத்திலே எத்தனையோ முருகன் ஆலயங்கள் இருந்தாலும் இந்த நல்லூரில் மட்டும் அடியார்கள் நான் முந்தி நீமுந்தி என்று இடித்துத் தள்ளிக் கொண்டு முன்னேறுவதற்குக் காரணம் என்ன? கோயில் மூலஸ்தானத்திலே இருக்கும் அருட்சக்தி வாய்ந்த வேல்தான். அந்த அருள்வேல் வழிபடும் அடியார்களுக்கு அருளை வாரி வழங்கும் சக்தி வேலாகும்.

அன்றும் இன்றும் என்றும் அருள்புரியும் ஆனந்த அருட்சக்தி வேல் இந்த நல்லூரிலே அருளாட்சி புரிகின்றது அந்த வேல்முருகனுக்கு இன்று நிகழும் கற்பூரத் திருவிழா அருள் மயமானது. ஆகவே அழகன் முருகனின் ஆனந்த அற்புதக் காட்சி காண வருமாறு அடியார்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அன்பர்கள் வருக! அறுமுகன் அருள் பெறுக.

'கலாபூஷணம்'
இராசையா ஸ்ரீதரன்

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 398

ஜெயராசா விபுலன்

**நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன. ஆனால் அனுபவமே தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கின்றது.**

ராயு தேவா



என்ன செய்தி போட்டு இருக்கு நாமும் பார்ப்பம்

லோஜி லோஜிதா





எட்வின் டேவிட்




காலையில பல்லு விளக்கிட்டு சாப்பிட வேண்டாம்
ஆனால் சாப்பிட்டுகிட்டே பல்லு விலக்கலாம்

வேணு வேணுசன்




சாலினி பத்மநாதன்


ஒருத்தருக்கு இரத்தம் வேணும்னு சொன்னதும் குடுக்க வாராங்க பாருங்க...



அவங்கள விடவா இந்த உலகத்தில யாராவது அழகா இருந்துறப் போறாங்க!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ராஜபக்ச தனக்கான ஆதரவு வாக்குகளை இழப்பதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக மகிந்தவைப் போட்டியிட ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் என சிறிசேன தெளிவாக அறிவித்துள்ளார். இருப்பினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலர் ராஜபக்ச தேர்தலில் போட்டியிட வேண்டும் என விரும்புகின்றனர்.

இது தொடர்பில் ஒரு சாரார் ராஜபக்சவுடன் பேச்சுக்களை மேற்கொள்கின்றனர். இதன் மூலம் இவர்கள் ராஜபக்சவின் தலைமையில் பிறி

# அமெரிக்கா- இலங்கை உறவுகள் தொடருமா?

ராஜபக்ச அரசாங்கத்தின் மீதான ஊழல் மோசடி விசாரணைக்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்குவதன்மூலம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ச தனக்கான ஆதரவு வாக்குகளை இழப்பதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு huffington post ஊடகத்தில் Taylor Dibbert எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முதன்மை பிரதி உதவிச் செயலர் றிச்சார்ட் நு. கொக்லான்ட் (Richard E. Hoagland) அண்மையில்வோசிங்ரன் அனைத்துலக வர்த்தக சபையில் உரை ஒன்றை நிகழ்த்தியிருந்தார். இவர் தனது உரையின் ஆரம்பத்தில் நேபாளம் தொடர்பாகவும் பின்னர் அமெரிக்கா - இந்திய உறவுநிலை முன்னேற்றமடைந்தமை தொடர்பாகவும் குறிப்பிட்டார்.

இதைவிட சிறிலங்கா, பங்களாதேஸ், மத்திய ஆசியா, அமெரிக்காவின் வர்த்தக நலன்கள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் வர்த்தக சார் செயற்பாடுகள் தொடர்பாகவும் கொக்லண்ட் எடுத்துக் கூறினார். இவரது உரை தரம் மிக்கதாகக் காணப்பட்டது. கொக்லண்ட் தனது உரையின் போது சீனா தொடர்பில் மென்மையான வார்த்தைகளைப் பயன்படுத்தியமை வரவேற்கத்தக்கதாகும்.

அமெரிக்கா-சிறிலங்கா உறவு தொடர்பாக கொக்லண்ட் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

'இந்தியாவின் தென்கிழக்குத் திசையிலிருந்து பாக்குநீரிணைக்குக் குறுக்காக 35 மைல்கள் தொலைவிலுள்ள சிறிலங்காத் தீவில் இடம்பெற்ற ஜனநாயகத் தேர்தல் அமெரிக்காவுடன் நல்ல தொரு உறவைப் பேண வழி வகுத்தது. சிறிலங்காவில் தற்போது ஆட்சி செய்யும் புதிய ஜனாதிபதி ஏற்கனவே நடைமுறையிலிருந்த கடும்போக்கு அரசியல் மற்றும் குடும்ப முதலாளித்துவம் போன்றவற்றிலிருந்து நாட்டை மீட்டெடுத்து மீளிணக்கப்பாடு மற்றும் முழுமையான அபிவிருத்தி போன்றவற்றை முன்னெடுப்பதற்கான புதிய பாதையை நோக்கி நாட்டைக் கொண்டு செல்கிறார். இதுவே எமக்கும் சிறிலங்காவுக்குமிடையில் நல்லுறவைப் பேண வழி வகுத்துள்ளது'

'சிறிலங்காவின் தற்போதை ஜனாதிபதி தேர்ந்தெடுத்துள்ள புதிய பாதையை நோக்கிச் செல்வதற்கும், சிறிலங்காவில் நல்லாட்சியைப் பலப்படுத்துவதற்கும் குறிப்பாக இதனுடைய நீதி மற்றும் நிதி நிறுவகங்கள் தொடர்பில் புதிய ஜனாதிபதியால் முன்னெக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துவதற்கு நாங்கள் நிறையத் திட்டங்களைக் கொண்டுள்ளோம். இப்புதிய பாதையானது சிறிலங்கா வாழ் மக்களுக்கு நலன் பயக்குவதுடன் அமெரிக்க நலன்களுக்கும்துணைபோகும். சிறிலங்காவில் நல்லாட்சியை மேம்படுத்துவதற்கும், மனித உரிமைகளை முன்னேற்றவும், இந்திய மாக்கடலின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தவும் சிறிலங்காவுடன் இணைந்து தற்போது எம்மால் பணியாற்ற முடியும்' என கொக்லண்ட் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பந்திகள் கொக்லண்ட்டால் ஆற்றப்பட்ட உரையில் காணப்படும் மிகவும் நம்பிக்கை தரும் பகுதிகளாகும்.

சிறிலங்காவில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவுடன் தனது நட்புறவை முறித்துக் கொள்வதற்கான எவ்வித சமிக்கைகளையும் ஒபாமா நிர்வாகம் காண்பிக்கவில்லை என்பது நிச்சயமாகும். சிறிலங்காவின் நீதி மற்றும் நிதி நிறுவகங்களை முன்னேற்றுவதற்கு அமெரிக்கா துணைநிற்கும் என கொக்லண்ட் தனது உரையில் குறிப்பிட்டுள்ளதானது சிறிலங்காவில் முன்னெடுக்கபடும் ஊழல் விசாரணையை முதன்மைப்படுத்தியதாகும்.

அதாவது மகிந்த ராஜபக்ச ஆட்சியிலிருந்த போது நாட்டில் இடம்பெற்ற மிக மோசமான ஊழல் மோசடிகள் தற்போது மைத்திரிபால அரசாங்கத்தால் விசாரணை செய்யப்படுகின்ற நிலையில் அமெரிக்கா இதற்கு தனது ஆதரவை வழங்குவதாக கொக்லண்ட் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான பரப்புரையில் ஈடுபடுவதை அண்மைய சில சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தன்னால் தலைமை வகிக்கப்படும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டுப்படுத்துவதில் சிறிசேன தற்போதும் சிக்கல்களுக்கு முகங்கொடுக்கிறார்.

சிறிலங்காவின் அரசியலில் தற்போது குழப்பமான காலமாகும். சிறிசேன நாடாளுமன்றைக் கலைத்து ஓகஸ்ட்டில் பொதுத் தேர்தலை முன்னெடுப்பார் எனக் கூறப்படுகிறது. இருப்பினும் இத் தீர்மானத்தை இன்னமும் மைத்திரிபால சிறிசேன உறுதிப்படுத்தவில்லை.

தற்போதைய நாடாளுமன்றம் 2016 ஏப்ரல் வரை நாட்டை நிர்வகிக்க முடியும். ஆனால் சிறிசேன அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள குழப்பமே நாடாளுமன்றைக் கலைப்பதற்கான முக்கிய காரணமாகும்.

ராஜபக்ச அரசாங்கத்தின் மீதான ஊழல் மோசடி விசாரணைக்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்குவதன் மூலம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தொரு கட்சியின் கீழ் போட்டியிடலாம் என ஊகிக்கப்படு கிறது.

சிறிலங்கா ஜனாதிபதி என்ற வகையில் சிறிசேனவின் நிர்வாகம் சிறப்பு மிக்கதாக இல்லாவிட்டாலும் கூட கண்ணியம் மிக்கதாக உள்ளது. வருகின்ற மாதங்களில் சிறிலங்காவின் அரசியலில் எத்தகைய மாற்றங்கள் வரவுள்ளன என்பதை எதிர்வுகூறுவது கடினமானதாகும்.

தற்போது, குறைந்தது 2 விடயங்களாவது தெளிவாக உள்ளன. முதலாவதாக, சிறிசேன தன்னால் முடிந்தளவு தனது சொந்த அரசியற் கட்சிக்குள் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். இரண்டாவதாக, என்ன நடந்தாலும் சிறிசேன, ராஜபக்சவைப் போன்ற ஒரு ஆட்சியாளர் அல்லர்.

ஆகவே அமெரிக்கா- சிறிலங்கா உறவு இன்னமும் சில காலம் நீடிக்கும் எனத் தோன்றுகிறது. குறிப்பாக ராஜபக்ச மீண்டும் சிறிலங்காவின் ஆட்சியில் அமர்வதற்காக முன்னெடுக்கும் நடவடிக்கைகளை குழிதோண்டிப் புதைப்பதற்கு அமெரிக்கா தனது தடையற்ற ஆதரவை வழங்குவதன் மூலம் சிறிலங்காவுடன் தொடர்ந்தும் நல்லுறவைப் பேணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிக்கடை சிறைச்சாலை தாக்குதல் சம்பவம்

# மூவரடங்கிய குழுவின் விசாரணை அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு



(கொழும்பு)

**வெலிக்கடை சிறைச்சாலை தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென நீதியமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு தனது அறிக்கையை நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தது.**

ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதியரசர் சமல் நம்புவசம் தலைமையிலான இந்த குழுவில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அசோக்க விஜேதிலக்க மற்றும் ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரியான சட்டத்தரணி எஸ். ககேக்க லியனகே ஆகியோர் அங்கம் வகித்தனர். மேற்படி குழுவினர், வெலிக்கடை மோதல் குறித்து கடந்த 5 மாதங்களாக விரிவான விசாரணைகளை நடத்தி சம்பவத்திற்கு காரணமாகவிருந்த சகல தரப்பினரிடமிருந்தும் சாட்சியங்களை பதிவு செய்து அதன் முழுமையான அறிக்கையை நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினூடாக பிரதமரிடம் அறிக்கை கையளித்துள்ளனர்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்களுக்கமைய பிரதமரால் வழங்கப்படும் பணிப்புரைகள் நடவடிக்கைகளுக்கு எடுக்கப்படுமென நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அறிக்கை கையளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நீதியமைச்சின் செயலாளர் கமலினி சில்வாவும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் அரச, தனியார் வங்கிகளிடமிருந்து 198762 கோடி ரூபா கடன்

## ஹர்ஷ டி சில்வா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு அறிவிக்காத வகையிலும் பாராளுமன்றத்தின் அனுமதி இன்றியும் அரச மற்றும் தனியார் வங்கிகளில் இருந்து ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 762 கோடி ரூபாவை (198762 கோடி ரூபாவை) கடனாகப் பெற்றுள்ளது என்று அரசாங்கம் நேற்று முன்தினம் சபையில் அறிவித்துள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட இரகசியக் கடன் தொகையை தற்போதைய அரசாங்கம் செலுத்த வேண்டியிருப்பதாக கொள்கை உருவாக்கம் மற்றும் பொருளாதார திட்டமிடல்கள் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அசோக்க அபேசிங்கவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு பதிலளிக்கப்பட்டது.

பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா இங்கு மேலும் விளக்கமளிக்கையில்,

முன்னைய அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தின் அனுமதியின்றிப் பெற்றுக்கொண்ட மேற்படி ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 762 கோடி ரூபா கடனை அரசாங்கமும் அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களுமே வங்கிகளுக்கு செலுத்த வேண்டியுள்ளது.

இந்த வகையில் கொமர்ஷல் வங்கிக்கு 140,220.5 கோடி ரூபாவும், தேசிய சேமிப்பு வங்கிக்கு 37,987.7 கோடி ரூபாவும் 2014 டிசம்பர் 31ஆம் திகதிக்குள் செலுத்த வேண்டியிருந்துள்ளது. இதேபோன்று மேற்படி திகதிக்குள்ளேயே இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனமும் 160 கோடி ரூபாவை தேசிய சேமிப்பு வங்கிக்கு செலுத்த வேண்டியிருந்தது.

மேலும் தேசிய சேமிப்பு வங்கிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 5,167.5 கோடி ரூபாவும் இலங்கை வங்கிக்கு 2603.5 கோடி ரூபாவும் மக்கள் வங்கிக்கு 1897.1 கோடி ரூபாவும் ஹட்டன் நெஷனல் வங்கிக்கு 1,362.3 கோடி ரூபாவும் கொமர்ஷல் வங்கிக்கு 479.7 கோடி ரூபாவும் தேசிய அபிவிருத்தி வங்கிக்கு 469.9 கோடி ரூபாவையும் டி.எப்.சி.சி வங்கிக்கு 103.7 கோடி ரூபாவும் கடந்த வருடம் 31ஆம் திகதிக்குள் முன்னைய அரசாங்கத்தினால் செலுத்த வேண்டியிருந்தது.

இதேவேளை 2980.3 கோடி ரூபாவை இலங்கை வங்கிக்கும் 4,410.9 கோடி ரூபாவை மக்கள் வங்கிக்கும் 2014 டிசெம்பர் 31 இற்குள் குத்தகை தொகையாக செலுத்த வேண்டியிருந்தது. அத்துடன் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் தேசிய



சேமிப்பு வங்கிக்கு 13.8 கோடி ரூபாவும் கொமர்ஷல் வங்கிக்கு 19.3 கோடி ரூபாவும் தேசிய அபிவிருத்தி வங்கிக்கு 19.3 கோடி ரூபாவும் டி.எப்.சி.சி. வங்கிக்கு 115 கோடி ரூபாவும் இவ்வருடத்தின் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் செலுத்த வேண்டியுள்ளது.

இது இவ்வாறிருக்க வியாபார முகாமைத்துவ தேசிய பாடசாலையினால் 286 கோடி ரூபா இலங்கை வங்கிக்கு 465.5 கோடி ரூபாவை வரையறுக்கப்பட்ட இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கிக்கும் இவ்வருடத்தின் டிசம்பர் 31க்கு முன்பதாக செலுத்த வேண்டியுள்ளது.

மேற்படி கடன் தொகைகள் அனைத்தும் பாராளுமன்றத்தின் அனுமதி இன்றியே இன்றைய அரசாங்கத்தினால் பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் நாட்டின் வருமானம் 21 வீதத்தால் அதிகரித்திருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## சம்சார சாகரம்

புதிதாகத் திருமணம் செய்து கொண்ட அவருக்கு, மனைவி மீது கொள்ளை ஆசை. அரசாங்க உத்தியோகம். அடிக்கடி வீட்டுக்கு வர முடியாத நெருக்கடியான பணி. ஓரிரு தினங்கள் சென்றன. அபூரத பின் விளைவுகளை மறந்து, அன்றிரவு மனைவியை நினைத்து வீட்டிற்கு ஓடி வந்தார். வீட்டிலே மனைவி இல்லை. அவள் பிறந்த வீட்டுக்குப் போயிருந்தாள். ஆசை அவரைத் துரத்தியது. மழையும் மின்னல்களும் பூமிக்கும் ஆகாசத்துக்குமாக ஒரு வைர நெசவு நடத்திக் கொண்டிருந்தன. போதாக்குறைக்கு ஆற்றைக் கடக்க வேண்டும். படகோ பரிசலோ இல்லை என்றாலும் கையில் கிடைத்த ஒன்றைப் பற்றிக் கொண்டு, மறு கரைக்குப் பாய்ந்தார். இருட்டில் தடுமாறி நடந்து, மனைவியின் வீட்டுக் கதவை வேகமாகத் தட்டினார். தூக்கக் கலக்கமோ, இடியின் சப்தம்தான் காரணமோ, தெரியவில்லை. கதவை யாரும் திறக்கவில்லை. பக்கத்தில் இருந்த ஆலமரத்தை நோக்கிப் பாய்ந்தார். தொங்கிய விழுதைப் பற்றிப் பரபர என்று மேலே ஏறிப் போய், கிளை வழியே மொட்டை மாடியில் இறங்கி, மாடி அறையின் கதவுகளை அறைந்தார்.

கதவு திறந்த மனைவி விக்கித்துப் போனாள். "என்ன? ஏன்? எப்படி? வந்தீர்கள்? இப்படி நனைந்து போய்... நள்ளிரவில்... அப்படி என்ன அவசரம்?" "உன் மது அவ்வளவு பிரியம்! பார்க்க வேண்டும் என்று தோன்றியது... தாமதிக்க மனம் இல்லை! ஓடி வந்தேன். ஆற்றில் வெள்ளம். படகும் இல்லை. அகப்பட்டதைப் பிடித்து மிதந்து வந்தேன்" மின்னல் வெட்டியது. ஆற்று வெள்ளத்தில் பிணம் மிதப்பது புலப்பட்டது!

"மேலே எப்படி ஏறி வந்தீர்கள்?" "பக்கத்தில் உள்ள ஆலமரத்தின் விழுதைப் பிடித்து மேலே ஏறினேன்." "ஆலமரமா? நம் வீட்டுப் பக்கத்திலா? இல்லையே!" மனைவி திகைத்துப் பேசினாள்.

மீண்டும் மின்னல் வெளிச்சம் காட்டியது. பக்கத்தில் இருந்த மரத்தின் கிளையிலிருந்து மலைப்பாம்பு ஊஞ்சல் ஆடியது! மனைவியின் உள்ளமே ஆடியது. எத்தனை ஆபத்துகளைக் கடந்து இவர் ஓடி வந்திருக்கிறார்! ஏதும் நடக்கக் கூடாதது நடந்திருந்தால்......

"ஏன் இப்படி ஆபத்துக்களைப் பாராமல் வந்தீர்கள்? அழிந்து போகிற இந்தச் சரீரத்தின் மீது உங்களுக்கு இவ்வளவு ஆசையா? இந்த ஆசைதானே இத்தனை ஆபத்துக்களை எதிர்கொள்ள வைத்தது! சுவாமி! இந்த உடம்பின் மீது வைத்த பிரியத்தை ராமன் மீது வைக்கக் கூடாதா? ராமநாமத்தின் மீது வைக்கக் கூடாதா?"

அந்தகாரமான அவர் உள்ளத்தில் அறிவு மின்னல் வெட்டியது. காட்டு வெள்ளத்தில் வந்தவருக்குக் கவிதை வெள்ளம் கரைபுரண்டது. மனத்தில் காமம் அழிந்தது – ராம நாமம் நுழைந்தது. அவருக்குள்ளே இருந்த விலங்கு செத்துப் போய்விட்டது. தெய்வீக எண்ணம் அவரை ஆட்கொள்ளலானது. அவர் துளசிதாசராகி ராமனுக்கே தம்மை அர்ப்பணித்துவிட்டார்.

உயிருக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள தடையாகிய பொருட்பற்று நீங்கினாலும், மனைவி மக்கள் மீது உள்ள பற்றை விட முடியாமல் தவிப்பவர்களுக்குத் துளசியின் வாழ்க்கை ஒரு திருப்பு முனை. பற்றுக்கள் ஒழிந்து, பாசம் அகன்று, பரம்பொருளில் லயித்து, பக்குவ நிலையில் மனிதன் நிற்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டு.

விரக்தியின் விளைவா இது? இல்லை. தெளிவின் முடிவு. அறிவின் எல்லை. விதி வசத்தால் உறவுகள் ஏற்படுகின்றன. அன்புடன் அவற்றை வளர்க்கவும் பேணவும் மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். மனிதனில் இருந்து தெய்வமாகும் போது, இந்த உறவுகளின் குறுகிய எல்லை தகர்ந்து போவது தவிர்க்க முடியாதது.

இந்தப் பேருண்மையை விளக்க, நாரதரையே கருவியாக்கிய கதை ஒன்று உண்டு, "அத்தனை பெரிய மகரிஷிக்குமா அப்படி?" என்று வருத்தம் வேண்டாம். விளக்கப்படும் உண்மையின் வலிமையை விளக்க அவ்வளவு பெரிய மகரிஷி தேவைப்படுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

பாற்கடலில் படுத்திருந்த பெருமாளைத் தரிசிக்க வந்தார் நாரத மகரிஷி. "நமோ நாராயணா" என்று பக்தி பொங்க வழிபட்ட மகரிஷியின் மனத்தில் ஒரு சந்தேகம்.... உறுத்தல்... கேட்டு விடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

"சுவாமி.... மண்ணுலகில் வாழும் மகான்கள் பலரும் சம்சார சாகரம், பாசவலை போன்றவற்றிலிருந்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று உங்களை நோககிக் கதறுகிறார்களே, சம்சார பந்தம் என்பது என்ன, அவ்வளவு சங்கடமானதா? ஒரே சமயத்தில் பல காரியங்கள் ஆற்றக் கூடிய பலம் பொருந்திய மனிதனால் பகவானை அனுபவித்துக் கொண்டே இல்லறத்திலும் இருக்க முடியாதா? "நாரதா.... முடியாது என்று இல்லை.... ஆனால் அது அவ்வளவு எளிது இல்லை, பலராலும் முடிவதில்லை என்பது யதார்த்தம்....."

"அப்படியா...! சம்சார பந்தம் என்பது இவ்வளவு சிக்கல் நிறைந்தது என்பதை என்னால் நம்ப முடியவில்லையே...." என்று இழுத்தார் நாரதர்.

நாராயணர் பேச்சை மாற்றினார். "நாரதா... ஒரு சிறிய உதவி தேவைப்படுகிறது. எனக்குத் தாகமாக இருக்கிறது. பூமிக்குப் போய் கங்கை நீரை இந்தக் குடம் நிறையக் கொண்டு வர முடியுமா?" என்று கேட்டவாறே வெள்ளிக் குடம் ஒன்றை எடுத்து நீட்டினார். பூமிக்கு வந்த நாரதர், வெள்ளிக் குடத்தைக் கங்கை வெள்ளத்தில் அமிழ்த்தினார். நிமிர்ந்தவருக்கு ஓர் அதிர்ச்சி! எதிர்க்கரையில் ஒரு மானுட மின்னல். மலர் சூடிய மலர்.... வெளிச்சமான விழிகளில் நாணத்தின் நளினமான நாட்டியம். ஆற்று வெள்ளத்தில் வெள்ளிக் குடம் அடித்துப் போவது கூட நாரதருக்குத் தெரியவில்லை.

இல்லறம் தொடங்கிப் பிள்ளைகள் பிறந்து, அவர்கள் வாழ்க்கை வளர்ந்து கொண்டிருந்தது. ஒரு நாள் பரபரப்பாகத் திருமதி நாரதர் ஓடி வந்தாள். "ஆற்றில் வெள்ளம் அதிகமாகிப் பாய்கிறது. இந்தக் கரை பள்ளமானது.... நாம் மறுகரை போவது நல்லது. அது மேடு.... வாருங்கள்...." என்று அவசரப்படுத்தினாள்.

கையில் கிடைத்த பொருட்களை அள்ளிக் கொண்டு, குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு, மனைவியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, வெள்ளத்தில் போராடி அயர்ந்தார் நாரதர். வெள்ளத்தின் வேகத்தில் சேகரித்து வைத்த பொன்னும் பொருளும் நழுவிப் போயின. மனைவியும் பிள்ளைகளும் முழுகத் தொடங்கினர். ஒரே கூச்சல் குழப்பம். யாரைக் காப்பாற்றுவது என்று புரியாமல் தவித்துப் போனார் நாரதர். அடுத்த விநாடி ஒரு பெரிய அலை அவரையே சுழற்றி எடுத்தது. "ஐயோ என்னை எப்படிக் காப்பாற்றிக் கொள்வேன்?" என்று தத்தளித்தார். அப்போது ஒரு குரல் கேட்டது. "நாரதா.... நலம் தானா திடுக்கிட்டுத் திரும்பினார். வெள்ளத்தின் மேலே திருமாலின் திருவுருவம்! சுவாமி சிரித்தார். "நாரதா, குடிக்கத் தண்ணீர் கேட்டேன். இவ்வளவு வெள்ளம் போகிறது..... இன்னுமா எடுக்க முடியவில்லை?"

மாயவன் நிகழ்த்திய மாயா லீலையில் சம்சார சாகரத்தின் ஆழம் நாரதருக்குப் புரிந்து விட்டது. "ஆளை விடுங்கள் சுவாமி..... நாராயணா.... நாராயணா...." என்று ஓட ஆரம்பித்தார் நாரதர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சமூக கட்டமைப்பு சீர்குலைவுக்கு முன்வைக்கப்படும் காரணங்கள்...



புலம்பெயர் தமிழர்களின் நிதிச் செல்வாக்கின் தாக்கத்திற்கு வித்தியா என்கின்ற பாடசால்ல மாணவி கோரமாகப் படுகொலை செய்யப்பட்டமை யாழ்ப்பாணத்தின் இன்றைய சமூகக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது என்கின்ற உண்மையை வெளிப்படுத்துகின்ற சாட்சியமாகக் காணப்படுகிறது.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் அனந்த் பாலகிட்னர் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

'குடும்பங்களை மனதளவில் பாதிக்கின்ற பல்வேறு சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறான மோசமான சம்பவங்களால சமூகங்கள் மற்றும் குடும்பங்கள் பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளதை காணமுடியும்.

குடும்ப மற்றும் சமூக உறவுகள், நிறுவகங்கள், நடைமுறைகள், சமூக வளங்கள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே பெரியளவில் உளவியல் பாதிப்பை உண்டுபண்ணக்கூடிய சம்பவங்கள் உருவாவதற்குக் காரணமாகும்.

சமூக நிலை மாற்றமுற்றமை மற்றும் சமூக இழைகள் சிதைவுற்றமை போன்ற பல்வேறு காரணிகளே மிக மோசமான சம்பவங்கள் இடம்பெற வழிவகுக்கிறது' என்கிறார் பேராசிரியர் தயா சோமசுந்தரம்.

பாரம்பரிய யாழ்ப்பாணத்து சமூகத்தில் தற்போது இடம்பெற்று வரும் சமூக மாற்றங்கள் தொடர்பாக புகழ்பெற்ற மூத்த உளவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம் இவ்வாறு விபரித்துள்ளார். 'நீண்ட காலமாகத் தொடரப்பட்ட யுத்தமானது சமூகத்தில் மதுபானப் பாவனை அதிகரிப்பதற்கும், வீட்டு வன்முறைகள் மற்றும் பாலியல் மீறல்கள் இடம்பெறக் காரணமாகும்' என பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராசிரியர் சோமசுந்தரம் அவர்கள் அனைத்துலக கல்வி சார் பணிகளில் ஈடுபட்டிருந்தாலும்கூட, இவர் தொடர்ந்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் விரிவுரைகளை ஆற்றியுள்ளார். போர் காரணமாக இவரது நண்பர் பலர் யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர்ந்து வேறிடங்களில் பணியாற்றிய போதும் பேராசிரியர் சோமசுந்தரம் யாழ்ப்பாணத்தில் தனது பணியைத் தொடர்ந்திருந்தார்.

இவர் போரின் தாக்கத்தால் ஏற்பட்ட பாரிய உளவியல் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அனைத்துலக அமைப்புக்களிடம் அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளார். Broken Palmyra என்கின்ற நூலின் துணை ஆசிரியராகவும் பேராசிரியர் கடமையாற்றியிருந்தார். இந்த நூலானது 1980களில் யாழ்ப்பாணத்தில் நிலவிய குழப்பமான சூழல் தொடர்பாக விளக்குகிறது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் தற்போதைய அரசியற் சூழல் உள்ளடங்கலாகப் பல்வேறு காரணிகள் யாழ்ப்பாணத்தின் சமூகக் கட்டமைப்பில் பாதிப்பைச் செலுத்துவதாக பேராசிரியர் சோமசுந்தரம் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையானது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது ஒட்டுமொத்த வடக்கு மாகாணம் முழுமையிலும் காணப்படுகிறது.

'சிறிலங்காவின் வடக்கு மற்றும் கிழக்கில் கிட்டத்தட்ட மூன்று பத்தாண்டுகளாக யுத்தம் நீடித்திருந்தது. இதனால் இங்கு வன்முறைகள் நிலவின. இறப்புக்கள், படுகொலைகள், கடத்தல்கள், சொத்து அழிவுகள் போன்றவற்றைக் நேரில் கண்ட மக்களின் நடவடிக்கை மாற்றமுற்றது. 2009 இல் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த யுத்தம் நிறைவுற்றது.

எனினும், இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் இயல்புநிலைக்குத் திரும்புவதிலும் தமது வாழ்வைக் கட்டியெழுப்புவதிலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இந்த சமூகத்தில் தற்போது புரையோடிப் போயுள்ள தீயசக்திகளை அழிக்க வேண்டிய மிகப் பெரிய சவால் ஒன்று காணப்படுகிறது' என பேராசிரியர் மேலும் விளக்குகிறார்.

'புங்குடுதீவு மாணவி வித்தியா வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை யாழ்ப்பாணத்தின் சமூகக் கட்டமைப்பு பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளமைக்கான தெளிவான எடுத்துக்காட்டு எனவும் இந்தச் சம்பவமானது தற்போது சிறிலங்காத் தீவு முழுமையையும் வடக்கு மாகாணத்தின் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணம் நோக்கித் திசை திருப்பியுள்ளதாகவும், இப்பிராந்தியத்தில் சமூகப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதையும் சுட்டிக்காட்டுவதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

'யாழ்ப்பாணத்தில் மதுபானப் பாவனை, போதைப்பொருட்பாவனை என்பன மிக முக்கிய பிரச்சினைகளாகும். பாடசாலை மாணவர்கள்கூட மதுபானம் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

போருக்குப் பின்னரான காலப் பகுதியில் போதைப்பொருட் பாவனை அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள மதுவரித் திணைக்களத்தின் ஆய்வில் உறுதிப்படுத்தப்படுகிறது.

2008 இலிருந்து மதுபானப் பாவனை அதிகரித்துள்ளது. ஒரு ஆண்டில் 1,000,000 லீற்றர் மதுபானம் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் 2014 இல் இது 7,000,000 லீற்றராக அதிகரித்துள்ளது' எனப் பேராசிரியர் சோமசுந்தரம் சுட்டிக்காட்டுகிறார்.

யாழ். குடாநாட்டில் வதியும் மக்களிற்கு வெளிநாடுகளிலிருந்து அதிகளவான நிதி கிடைப்பதால் ஒரு சமனற்ற நிலை உருவாகியுள்ளதாகவும், தமது சொந்த இடங்களைப் பார்வையிட வருகின்ற புலம்பெயர் தமிழர்களின் நடவடிக்கை முறைகள் போன்றன யாழ்ப்பாணத்தின் சீர்கேடுகளுக்குக் காரணமாக உள்ளதாகவும் பேராசிரியர் கூறுகிறார்.

'முன்னர் ஈருருளிகளைப் பயன்படுத்திய யாழ்ப்பாணத்தவர்களின் போக்குவரத்து ஊடகமாகத் தற்போது உந்துருளிகள் காணப்படுகின்றன. பொதுவாக ஒவ்வொரு வீடுகளிலும் உந்துருளிகள் உள்ளன. ஆகவே இந்தப் போக்கானது புலம்பெயர் தமிழ் மக்கள் தமது உறவுகளுக்காக அனுப்பும் நிதிச் செல்வாக்காலேயே ஏற்பட்டுள்ளது' என பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

புலம்பெயர் தமிழர்களின் நிதிச் செல்வாக்கின் தாக்கத்திற்கு வித்தியா என்கின்ற பாடசாலை மாணவி கோரமாகப் படுகொலை செய்யப்பட்டமை யாழ்ப்பாணத்தின் இன்றைய சமூகக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது என்கின்ற உண்மையை வெளிப்படுத்துகின்ற சாட்சியமாகக் காணப்படுகிறது.

இக்கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 10 பேரில் ஒருவரான எம்.குமார் என்பவர் சுவிற்சர்லாந்து வாழ் தமிழராவார்.

குறித்த சந்தேகநபரான குமார் என்பவர் சுவிசிலிருந்து புங்குடுதீவுக்கு வரும்போதெல்லாம் இவர் தனது நண்பர்களை மகிழ்ச்சிப்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதாக உள்ளூர் வாசிகள் குற்றம் சுமத்துகின்றனர். இவருடன் இணைந்து களியாட்டங்களில் ஈடுபடும் புங்குடுதீவு இளைஞர்கள் மிகவும் மோசமானவர்கள் எனவும் மக்கள் கூறுகின்றனர்.

சுவிஸ் வாசியான குமார் என்பவர் புங்குடுதீவுக்கு வரும்போதெல்லாம் வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்டு வந்து இந்த இளைஞர்களுக்குக் கொடுப்பதாகவும் இதனால் இவர்கள் மோசமான காரியங்களில் ஈடுபடுவதாகவும் மக்கள் விசனமுற்றுள்ளனர்.

வத்தியாவின் படுகொலையை அடுத்து யாழ்ப்பாண நீதிமன்றின் மீதான ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலானது இங்கு வாழும் மக்கள் சட்டம் ஒழுங்கைத் தமது கைகளில் எடுக்கத் தர்மானித்துள்ளனர் என்பதையே கோடிட்டுக் காட்டுவதாக வடக்கு மகாணத்திற்கான சிறிலங்கா காவற்துறையின் பிரதிப் பொறுப்பதிகாரி லலித் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

(தொடரும்)

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் எல்லையில்

# இந்திய இராணுவம் அதிரடித் தாக்குதல்

## 20 பயங்கரவாதிகள் பலி!

**(மணிப்பூர்)**

**மியன்மார் எல்லைப்பகுதியிலுள்ள மணிப்பூர் மாநிலத்திற்குள் நுழைந்து இந்திய இராணுவத்தினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் 20 பயங்கராவாதிகள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டனர்.**

இந்தத் தாக்குதல் சம்பவம தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மணிப்பூர் மாநிலத்தில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மியன்மார் நாட்டு எல்லைக்கு அப்பால் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் மீது இந்திய இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். அப்போது நடந்த துப்பாக்கிச் சணடையில் பயங்கரவாதிகள 20 பேர் கொல்லப்பட்டனர.


இதுகுறித்து இராணுவ தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளதாவது,

மியன்மார் அரசின் ஒப்புதலுடன் அந்நாட்டு எல்லைக்குள் நுழைந்து இந்திய இராணுவம் முதல்முறையாக தாக்குதல் நடத்தியுள்ளது

வரலாற்று சிறப்பு மிக்க இந்த தாக்குதலில் இராணுவம் தரப்பில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-5)

பாரதச் செய்தி

# தாக்குதல் நடத்துமாறு பிரதமர் மோடி உத்தரவு



மியன்மாருக்குள் புகுந்து பயங்கரவாதிகள் மீது உடனடியாக தாக்குதல் நடத்த பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டார் என்ற தகவலை மத்திய அமைச்சர் ராஜ்ய வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில், சான்டெல் மாவட்டத்தில், மாவோயிஸ்டுகள் பாணியில், கடந்த 4 ஆம் திகதி ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் அதிபயங்கர தாக்குதல்கள் நடத்தினர்.

குண்டுகளை வீசியும், துப்பாக்கிகளால் சுட்டும் நடத்திய இந்த தாக்குதல்களில் 20 வீரர்கள் உயிரிழந்தனர்.

கடந்த 20 ஆண்டுகளில் மணிப்பூரில் இராணுவத்தினர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும்.

இதனையடுத்து தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க மத்திய பாரதீய ஜனதா கூட்டணி அரசு முடிவு செய்தது.

இந்த நிலையில், மணிப்பூர் தாக்குதல்களில் தொடர்புடைய தீவிரவாதிகள், மேலும் தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும், அவர்கள் மியன்மார் பகுதியில் பதுங்கி இருப்பதாகவும் உளவுத்தகவல்கள் கிடைத்தன.

இதையடுத்து உஷாரான இந்திய இராணுவம், விமானப்படை உதவியுடன், நேற்றுமுன்தினம் காலை மியன்மார் எல்லைக்கு அப்பால், தீவிரவாதிகளை குறிவைத்து அதிரடி தாக்குதல்களை நடத்தியது.

அப்போது தீவிரவாதிகளுக்கும், இராணுவ கமாண்டோக்களுக்கும் இடையே பயங்கர துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் 50க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியா, எல்லைக்கு அப்பால் சென்று தீவிரவா திகள் மீது தாக்குதல் நடத்திய இந்த சம்பவம், மிகவும் அபூர்வமான ஒரு நிகழ்வு என கருதப்படுகிறது.

மியன்மார் அரசின் ஒப்புதலுடன் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் மியனமாருக்குள் புகுந்து பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்த பிரதமர் மோடி உத்தர விட்டார் என்ற தகவலை மத்திய அமைச்சர் ராஜ் யவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக என்.டி.டி.வி. செய்தி சனலுக்கு பேட்டி அளித்து பேசிய அமைச்சர் ராஜ்யவர்தன் சிங் கூறுகையில்,

"இந்திய இராணுவம், துணை இராணு வப் படைகள் மற்றும் பொது மக்கள் மீது தாக்குதல் நடத் திவிட்டு, இந்திய இராணுவம் உள்ளே வராது என்று மியன்மாரில் உள்ள பாதுகாப்பான இடங்களுக்குள் நம்பிக்கையுடன் சென்றுவிடுவது இந்த தீவிரவாதிகளின் வழக்கமான செயறபாடாகவுள்ளது. இச்செய்திகள் தற்போது முழுவதும் தெளிவாகி விட்டது.

இதுவரையில் இல் லாத வகையில், நமது பாரத பிரதமர் மிகவும் தைரிய மான முடிவினை எடுத்தார், மியன்மாருக்குள் புகுந்து பயங்கரவாதிகளை பின்தொட ர்ந்து உடனடியாக தாக்குதல் நடத்த இந்திய ராணுவத் திற்கு அனுமதி வழங்கினார்." என்று தெரிவித்துள்ளார்.

"இந்திய இராணுவம் மியன்மார் எல்லைக்குள் புகுந்து, இரண்டு தீவிரவாத முகாமகள் மீது அதிரடியாக தாக்குதல் நடத்தி, முழு முகாமையும் அழித்துவிட்டு பத்திரமாக திரும்பியது," என்பதை நாங்கள் உறுதிசெய்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று நாட்டின் மேற்கு பகுதிகளில், பாகிஸ்தான் ஒட்டிய பகுதிகளில் இந்தியா இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடுமா என்ற கேள்விக்கு அவர் பதில் அளித்து பேசுகையில்,

"தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிக்கும் அனைத்து நாடுகளுக்கும் எந்தஒரு சந்தேகமும் இல்லாத செய்தி இது, மேற்கு அல்லது குறிப்பிட்ட நாட்டில் நாங்கள் இப்பொழுது நடத்தியது போன்ற நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

நாட்டிலும் பயங்கரவாத எண்ணத்து டன் எந்தஒரு இயக்கமும் செயறபட்டால் விரட்டு வோம்," என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சூரிய நமஸ்காரத்தை எதிர்ப்போரை கடலில் மூழ்கடிக்க வேண்டும்-பா.ஜ.க.



சூரிய நமஸ்காரத்தை எதிர்ப்போரை கடலில் மூழ்கடிக்க வேண்டும் என்று பாஜக மூத்த தலைவரும், அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான யோகி ஆதித்யநாத் பேசியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக உத்தரப் பிரதேச மாநிலம், வாரணசியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் தெரிவிக்கையில்,

வாழ்க்கையை வாழ்வதற்கு தேவையான சக்தியை அளிக்கும் ஆதாரமாக சூரியன் திகழ்கிறது.

சூரியனை மத ரீதியில் பார்ப்போருக்கு நான் தாழ்மையுடன் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அவர்கள் அனைவரும் தங்க ளைத் தாங்களே கட லில் மூழ்கடித்துக் கொள்ள வேண் டும அல்லது இரு ட்டு அறையில் அடைந்து கொள்ள வேண்டும்.

சாதி, மதம் அல்லது நம்பிக்கை அடிப்படையில் யாரையும் சூரியன் வேறுபடுத்தி பார்ப்பதில்லை. அதை மறந்துவிட்டு, சூரியனை மதவாதம் என தெரிவித்தால், அவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது என்பதே எனது கருத்தாகும். அவர்கள் அனைவரும், சூரிய வெளிச்சத்தை பயன்படுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார் அவர்.

பாடசாலைகளில் யோகா, சூரிய நமஸ்காரத்தை கற்பிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்போவதாக அனைத்து இந்திய முஸ்லிம் சட்ட வாரியம் தெரிவித்திருந்தது. இந்நிலையில், யோகி ஆதித்யநாத் இவ்வாறு பேசியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 100 | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 80 | 120 | 80 | 100 |
| தக்காளி | 60 | 100 | 70 | 80 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 120 | 80 | 110 | 120 | 80 | 100 |
| கரட் | 250 | 160 | 180 | 240 | 240 | 160 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30 | 30 |
| புடோல் | 120 | 110 | 90 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 150 | 140 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 140 | 120 | 120 | 180 |
| வெண்டிக்காய் | 160 | 160 | 120 | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 80 | 100 | 120 | 80 | 100 |
| பயற்றங்காய் | 160 | 120 | 120 | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 250 | 200 | 160 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 150 | 140 | 140 | — | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 170 | 160 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 140-200 | 250 | 300 | 300 | 200 | 300 |
| போஞ்சி | 250 | 180 | 200 | 200 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 60 | 60 | — | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30 | 30 | 20-40 | 30 |
| தேசிக்காய் | 130-180 | 160 | 150 | 160 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 150 | 160 | 150 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 100 | 80 | 120 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 30 | 20 | 20 | 10 | 20 |

## அதிரடி நடவடிக்கை

நாடுமுழுவதும் உள்ள 4 ஆயிரத்து 470 அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உரிமங்களை மத்திய உள்துறை அமைச்சகம் அதிரடியாக இரத்து செய்துள்ளது.

வெளிநாட்டு நன்கொடைகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ், வரவு செலவு கணக்குகளை முறையாகச் சமர்ப்பிக்காத தொண்டு நிறுவனங்கள் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம், முன்னணி பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பல முக்கிய அமைப்புகள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. உரிமங்களை ரத்து செய்யும் முன்னர சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு முறைப்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

டில்லி துணை முதலமைச்சர் மணிஷ் சிசோடியா நடத்திவரும் விக்ரம் சாரா பாய் தொண்டு நிறுவனம் உள்ளிட்ட பிரபலமான மேலும பல அமைப்புகளின் உரிமங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு நாணயங்களை கடத்த முயன்றவர் கைதானார்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சிங்கப்பூரிறகு சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாணயத்தாள்களை கொண்டு செல்ல முயன்ற நபரை கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ஒரு தொகை அமெரிக்க டொலர்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி 53 இலட்சத்து 38 ஆயிரத்து 136 ரூபா என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய சுங்க அதிகாரிகள சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தகக்கது. (இ-5)

# மதில் மீது ஏறிப் போராட்டம் நடத்துவது பிக்குகளுக்கு பொருத்தமாக அமையாது

## அஸ்கிரி பீடாதிபதி கருத்து

(கொழும்பு)

**மதில் மீது ஏறிப் போராட்டம் நடத்துவது பௌத்த பிக்குகளுக்கு பொருத்தமாக அமையாது என அஸ்கிரிய பீடாதிபதி அத்தாதஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.**

மரங்கள், கற்கள் மற்றும் மதில்கள் மீது ஏறி போராட்டம் நடத்துவது பௌத்த பிக்குகளுக்கு பொருந்தக் கூடியதல்ல. இவ்வாறான செயற்பாடுகள் குறித்து பொருத்தமான ஓர் உடன்பாடு எட்டப்பட வேண்டும்.

போராட்டங்களில் பங்கேற்கும் சில இளம் பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் சர்வதேச ரீதியில் பௌத்த மதத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அண்மையில் இளம் பௌத்த பிக்குகள் மதில் ஒன்றின் மீது ஏறி போராட்டம் நடத்தியதனை காணக் கிடைத்தது.



இதனை பார்த்ததும் நான் மிகவும் வேதனையடைந்தேன். பொறுப்புடைய தலைமை பீடாதிபதிகள் இணைந்து இவ்வாறான செயற்பாடுகளை தடுக்க பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென அஸ்கிரி பீடாதிபதி அண்மையில், பெல்லன்வில விமலதன தேரரை சந்தித்த போது இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

## அகதிகள் படகு வழிமறிக்கப்பட்டது தொடர்பில் குடிவரவுத்துறை அமைச்சர் பதிலளிக்கவில்லை

இந்தோனேசியாவில் இருந்து நியூசிலாந்து செல்லும் வழியில் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் வழிமறிக்கப்பட்ட அகதிகள் படகு தொடர்பில், அந்நாட்டு குடிவரவு த்துறை அமைச்சர் இன்னும் பதில் வழங்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்று இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இலங்கையர்கள் உட்பட்ட 65 பேரை ஏற்றிய படகு அவுஸ்திரேலியா ஊடாக நியூசிலாந்துக்கு சென்றுகொண்டிருக்கையில், அதனை வழிமறித்த அவுஸ்திரேலிய கடற்படையினர் அகதிகளை அழைத்துச் சென்ற கடத்தல்காரர்களுக்கு இலஞ்சம் கொடுத்ததாக அகதிகள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இதன்காரணமாகவே கடத்தல் காரர்கள் தம்மை கைவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாகவும் அகதிகள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தநிலையில் இது குறித்து அவுஸ்திரேலிய ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ள போதிலும் குடிவரவுத் துறை அமைச்சர் டட்டன் இன்னும் உரிய பதிலை வழங்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.(இ-5)

## ஐ.நா.விசாரணைக்குழுவில் சந்திரநேரு சாட்சியமளிப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் இலங்கை தொடர்பில் நடத்தப்பட்டு வரும் விசாரணைக் குழுவின் முன்னிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் சந்திரநேரு சாட்சியமளித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2009ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போது, அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

வன்னி இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் கொழும்பில் தங்கியிருந்த அவர், இலங்கைப் படையினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு தேநீர் வழங்கி சுட்டுக் கொலை செய்ததாக குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான புலித்தேவனுடன் சந்திரநேரு மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணியதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவை ஆதாரம் காட்டி சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. (இ-5)

## கொரியாவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்களை அழைத்து வர நடவடிக்கை

(கொழும்பு)

ஒப்பந்த காலம் நிறைவடைந்த பினனரும் சட்டவிரோதமான முறையில் கொரியாவில் தங்கியுள்ள இலங்கை பணியாளர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

கொரியாவில் இதுவரை 26 ஆயிரம் இலங்கையர்கள் தொழில புரிவதாகவும், இவ்வருடத்தின் முதல் பாதியில் மாத்திரம் 5 ஆயிரம் பணியாளர்கள் கொரியாவுக்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளதாகவும அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கொரிய மொழி தகுதிகாண் போட்டிப் பரீட்சை இம்மாதம் 13,14 ஆம் திகதிகளில் கொழும்பிலுள்ள நான்கு மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி, டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரி, கௌதமி பாலிகா, அசோகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்தப் பரீட்சை இடம்பெறவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### தேவகுமார் கிறிஸ்ரிகன்

புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு செல்வபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தேவகுமார் கிறிஸ்ரிகன் கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் திருவுடல் நேற்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு செல்வபுரம் இயேசு அழைக்கிறார் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனையுடன் செல்வபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



### லெட்சுமண ஆச்சாரியார் பக்கீர்சாமி

வண்ணார்பண்ணை சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட லெட்சுமண ஆச்சாரியார் பக்கீர்சாமி கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கனடாவில் நடைபெற்றது. அன்னாரின் துக்கம் அனுஷ்டிக்கும் நிகழ்வு 314, கே.கே.எஸ். வீதியில் உள்ள கெங்காதரன் ஆச்சாரியார் இல்லத்தில் நேற்று நடைபெற்றது.



### திருமதி கிருஷ்ணர் வள்ளியம்மை

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் வள்ளியம்மை கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது சித்தன்கேணி இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சுப்பிரமணியம் செல்லமுத்து

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்லமுத்து கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் கொல்லங்கலட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கீரிமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருநாவுக்கரசு வேலாயுதபிள்ளை

யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு வேலாயுதபிள்ளை கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சென்னை அடையாரிலுள்ள அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் பி.ப.3 மணியளவில் பெசன்ட் நகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### முத்தையா மாசிலாமணி

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் குறிகட்டுவானைப் பிறப்பிடமாகவும் மணிக்கூட்டு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மாசிலாமணி கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மு.ப. 10 மணி வரை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி நாகரத்தினம் சரஸ்வதி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வயாவிளானை வசிப்பிடமாகவும் கனடா Montreal ஐ வதிவிடமாகவும் கொண்ட நாகரத்தினம் சரஸ்வதி கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணி தொடக்கம் பி.ப.2 மணிவரை Complexes Funerires Yves Legare-Pierrefonds,14370 Boulde Pierrefonds,Pier refonds,QC H9H 4R7,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பரராஜசிங்கம் பரமேஸ்வரி

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, நாச்சிமார் கோவிலடி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் பரமேஸ்வரி கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணிவரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave,Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### ஆறுமுகம் பத்மநாதன்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பத்மநாதன் கடந்த 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை St.Marylebone Crematorium,East End Road,East Finchley,London N2 ORZ,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கனகரத்தினம் மதியாபரணம்

(இய்வுபெற்ற பிரதம லிகிதர் யாழ்.மாநகரசபை)

கண்டி கம்பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூர், கனடாஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் மதியாபரணம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மு.ப.11 மணிவரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave,Markham,ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் இடம்பெற்றுவரும் மோதலால் 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர் உயிரிழப்பு

சிரியாவில் இடம்பெற்று வரும் மோதல்களில் 2இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ள தாக சிரியா மனித உரிமைகள் அவதான நிலையம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டிலிருந்து சிரியாவில் இடம்பெற்று வரும் மோதல்களில் 2இலட்சத்து 30ஆயிரத்து 618 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பலியானவர்களில் 11ஆயிரத்து 493 சிறுவர்கள் மற்றும் 7ஆயிரத்து 371 பெண்கள் உட்பட 69 ஆயிரத்து494 பொதுமக்கள் உள்ளடங்குகின்றனர். அத்துடன் இதில் 49ஆயிரத்து106 அரசாங்கப் படையினரும் 36ஆயிரத்து464 அரசாங்க ஆதரவாளர்களும் உள்ளடங்குவதாக இந்த அறிக்கை கூறுகிறது.

மேலும் மேற்படி மோதல்களில் 41ஆயிரத்து116 சிரிய ஜிஹாதிகள் மற்றும் குர்திஷ் போராளிகளும் 31 ஆயிரத்து 247 அரசாங்க எதிர்ப்பு வெளிநாட்டு போராளிகளும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் பலியானவர்களில் 3ஆயிரத்து191 பேர் அடையாளம் காணப்படாத நிலையிலுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



சிரியாவில் இந்த வருடத்தில் அதிகளவானோரைப் பலிகொண்ட மாதமாக மே மாதம் விளங்குவதாகவும் அந்த மாதத்தில் 6ஆயிரத்து657 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் சிரிய மனித உரிமைகள் அவதான நிலையம் தெரி விக்கிறது.

அம்மாதத்தில் பலியானவர்களில் அநேகர் அரசாங்கப் படையினராகவும் ஜிஹாதிகளாகவும் உள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் காணாமற்போயுள்ள சுமார் 20ஆயிரம் பேர் மேற்படி பலியானவர்கள் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களில் சுமார் 9ஆயிரம் பேர் அரசாங் கத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையி லும் 4ஆயிரம பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்ட நிலையிலும் காணாமற் போயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# காற்பந்து வன்முறை வழக்கில் 11 பேருக்கு மரணதண்டனை!

**(கெய்ரோ)**

**கடந்த 2012இல், காற்பந்து மைதானத்தில் நடந்த வன்முறையில் கைது செய்யபபட்ட 11 பேருக்கு எகிப்து நீதி மன்றம் நேற்றுக்காலை மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.**

எகிப்தின் போர்ட் செட் மைதானத்தில், அல் மாஸ்ரி, அல் ஆஹ்லி என இரு காற்பந்தாட்ட அணிகள் மோதின. போட்டி முடிந்ததும், ஜெயித்த அணியின் ரசிகர்கள், தோற்ற அணியின் ரசிகர்களை வெறுப்பேற்ற ஆரம்பித்ததும், இரு அணி ரசிகர்களும் மோதிக் கொண்டனர்.

அந்த வன்முறையில், 70 பேர் இறந்தனர் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த வழக்கை எகிப்து நீதிமன்றம், நேற்று நேரலையில் விசாரணை செய்தது. அப்போது, இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களில், 11 பேருக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது. சிலருக்கு, 15 ஆண்டுகளும், சிலருக்கு ஐந்து ஆண்டுகளும் சிறை தண்டனை வழங்கப்பட்டது் சிலர் குற்றமற்றவர்கள் என தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த தீர்ப்புக் குறித்து, தண்டனை பெற்றவர்கள் மேல்முறையீடு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




# பிரேசிலுக்கான தூதரை மீள அழைத்தது துருக்கி

ஆர்மீனியர்களை துருக்கிய ஒட்டமன் பேரரசு இனப்படுகொலை செய்ததாக பிரேசில் நாட்டு நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியதையடுத்து அந்நாட்டுக்கான தனது தூதரை துருக்கி திரும்ப அழைத்துக கொண்டது. இதுகுறித்து துருக்கி நாட்டின் வெளியுறவு அமைச்சக உயரதிகாரி தெரிவிக்கையில், ஆர்மீனியர்கள படுகொலை குறித்து பிரேசில் செனட் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அது ஒரு இனப்படுகொலை என குறிப்பிடப்பட்டுள்ளது.

வரலாற்றைத் திரித்து பிரேசில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது குறித்து ஆலோசிப்பதற்காக அந்நாட்டுக்கான துருக்கி தூதர் ஹுசைன் டிரியாஸ் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டார் என அவர் தெரிவித்தார்.

முதல் உலகப்போர் நடைபெற்ற சமயத்தில் துருக்கிய ஒட்டமன் பேரரசு ஆட்சி நடைபெற்ற ஆர்மீனியாவில், அந்த நாட்டைச் சேர்ந்த கோடிக்கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. யூதப் படுகொலைக்கு முன்னதாக நடைபெற்ற 20ஆம் நூற்றாண்டின் முதல் இனப்படுகொலை என அந்த நிகழ்வு வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படுகிறது.

ஆனால், இந்த எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என்றும், உயிரிழந்தவர்கள் அனைவரும் உலகப்போரில் பங்கேற்றவர்கள் எனவும் துருக்கி தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில், இந்த நிகழ்வை இனப்படுகொலை என பிரேசில் செனட் சபை குறிப்பிட்டுள்ளதால் அந்நாட்டின் தூதரை துருக்கி திரும்ப அழைத்துள்ளது. இதே கருத்தை போப் ஆண்டவர் கடந்த ஏப்ரல் மாதம் தெரிவித்ததையடுத்து, வாடிகனுக்கான தனது தூதரரையும் துருக்கி திரும்ப அழைத்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நேபாளத்தில் அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றுவதில் கட்சிகளிடையே உடன்பாடு

(காத்மண்டு)

நேபாள அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றுவதில் அந்த நாட்டுக் கட்சிகளிடையே கடந்த திங்கட் கிழமை உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்த நாட்டுக் கென்று அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான அரசியலமைப்புச் சட்டத்தை அமைப்பதில் பல ஆண்டுகளாக நீடித்து வந்த முட்டுக்கட்டை விலகியதாகக் கூறப்படுகிறது.

நேபாளத்தில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பெரும் உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டுள்ள நிலையில், அரசியலமைப்புச் சட்ட விவகாரத்தில் எதிரும் புதிருமாக மோதிக் கொண்டிருந்த அரசியல் கட்சிகள் தங்களது கடுமையான நிலைப்பாட்டைத் தளர்த்திக் கொண்டு இந்த உடன்பாட்டை மேற்கொண்டிருப்பதாக பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

அந்த நாட்டின் முக்கிய கட்சிகளான் நேபாள காங்கிரஸ், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (ஒன்றுபட்ட மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்), மாதேசி மக்கள் உரிமைக் கழகம் (ஜனநாயகம்) ஆகியவை அரசியலமைப்புச் சட்டத்துக்கான 16 அம்ச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தின்படி, 8 மாகாணங்களைக் கொண்ட, நாடாளுமன்ற ஆட்சி முறையில் இயங்கும், பல கட்சி தேர்தல் முறையைப் பின்பற்றும் நாடாக நேபாளம் செயற்பட அனைத்துக் கட்சிகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

பத்து ஆண்டுகளுக்கு அரசியல் சாசன நீதிமன்றம் ஒன்றை அமைக்கவும் இந்த உடன்படிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்த சில மாதங்களுக்குள் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றி அமுல்படுத்தும் நோக்கில், இந்த ஒப்பந்தம் கடந்த திங்கட்கிழமை இரவு கையெழுத்தானதாக நேபாள காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேபாளத்தை வழி நடத்துவதற்கான ஒரு முழுமையான அரசியலமைப்புச் சட்டம் அமைவதற்கான வாய்ப்பை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளதால், அந்த நாட்டுக்கு இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு எனக் கூறப்படுகிறது. (இ-5)

# தென்கொரியாவில் மெர்ஸ் வைரஸுக்கு பலியானோர் எண்ணிக்கை 9ஆக உயர்வு

(சியோல்)

தென் கொரியாவில் பரவி வரும் "மெர்ஸ்" (மிடில் ஈஸ்ட் ரெஸ்பிரேட்டரி சிண்ட்ரோம்) வைரஸால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒருவர் உயிரி ழந்ததைத் தொடர்ந்து, அந்த நாட் டில் "மெர்ஸ்" நோயால் உயிரிழ ந்தோர் எண்ணிக்கை 9ஆக உயர்ந்தது.

அதுதவிர, ஏற்கெனவே 87 பேர் "மெர்ஸ்" வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் 8 பேருக்கு அந்த நோய் தாக்கியிருப்பது கண்டறியப்பட்டது.

இதுகுறித்து தென்கொரிய சுகாதாரத்துறை கூறியதாவது,

கடந்த மாதம் 27, 28ஆம் திகதிகளில் சியோலில் உள்ள வைத்தியசாலையில் "மெர்ஸ்" நோயாளிகளுடன் நெருக்கத்தில் இருந்த 68 வயது பெண் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை உயிரிழந்தார்.

"மெர்ஸ்" வைரஸால் பாதிப்புக்குள்ளாகி இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும், அந்த வைரஸ் தாக்குதவதற்கு முன்பாகவே வேறு காரணங்களால் உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது என சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. (இ-5)

# சவுதியில் 2015ல் 97 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

சவுதியில் நேற்று முன்தினம் போதைப்பொருள் கடத்தல்காரன் மற்றும் கொலை வழக்கில் கைதான இருவருக்கு தலையை வெட்டி மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. சவுதி அரேபியா நாட்டில் மத துவேஷம், கொலை, கற்பழிப்பு, போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆயுதமேந்திய கொள்ளை ஆகிய கொடும் குற்றங்களுக்கு இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களின்படி மரண தண்டனை விதிக்கப்படுகிறது. சவுதிக்குள் போதைப்பொருளை கடத்த முயன்ற வழக்கில் சிரியாவை சேர்ந்த முஹம்மது உசேன் அப்துல கரிம் ஹல்வானி என்பவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவருக்கு சவுதியில் உள்ள ஜுபைல நகரில் தலையை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

மேலும், கொலைக் குற்ற வழக்கில் கைதான சவுதி நாட்டை சேர்ந்த உசேன் அல் கதானி மற்றும் ஜிப்ரான அல கதானி ஆகியோருக்கும் தலையை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர்கள் மூன்று பேரையும் சேர்த்து, இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்குள் மட்டும் சவுதியில் 97 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு முழுவதும் 87 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட நிலையில், இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களுக்குள் மட்டும் 97 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தககது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் துரைராஜாவின் 21வது சிரார்த்ததினம் இன்று

பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களின் நினைவுநாளாகிய இன்று அவரை நினைவுகொள்வது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்ல தமிழ் சமூகத்திற்கே பெருமையானது. ஓர் உயர்ந்த எண்ணமும் சிந்தனையும் அதற்கான மனமும் கொண்ட மனிதனினபதிவுகள்உயர்வானவை.

இன்றைய தமிழ்ச் சமூகம் எப்போதும் நினைவு கொள்ளவேண்டிய ஓர் உள்ளத்தின் நினைவு நாள்.

பேராசிரியர் அவர்களது கல்விப் புலமும் அதன் மரபும் தனித்துவமானது. உலகம் பின்பற்றும் மண்ணின் பொறிமுறை பற்றிய கோட்பாடு அவரது உச்சமான கல்வித்தகைமையாகும். அதனால் அவரது புகழ்பரவியது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 1961 ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தை பூர்த்தி செய்த துரைராஜா அவர்கள் 1962 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் பொறியியல் துறை விரிவுரையாளரானார். வோட்டசா மற்றும் கொலம்பிய பல்கலைக்கழகங்களின் அவரது புலமையைக் கருத்திற்கொண்டு வருகை விரிவுரையாளராக பணிபுரிய வாய்ப்புக் கிடைத்தது. அவரது அறிவும் புலமையும் உலகெங்கும் பரவியது. பேராசிரியர் அறிவையும் புலமையும் மட்டும் கொண்டிராது அன்பும் நேசிப்பும் கொண்ட நிர்வாகியாக 1988 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்துணைவேந்தரானார்.

அவரது ஆளுமையின் உச்சமான வெளிப்பாடாக அடுத்துவந்த 6 ஆண்டுகள் நிலைத்துநின்று சேவை புரிந்தார். தான்வாழ்ந்த மண்ணினை உண்மையாக நேசித்த பேராசிரியர் மாணவர்களுக்கான பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஆக்கித் தந்தார்.

அவரது சேவைக்காலம் முழுவதும் போர்ச்சூழலும் வன்முறையும் வடக்கு கிழக்கில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் காணப்பட்டது. அதனை எதிர்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தை சரியான முறையில் வழிப்படுத்தியதுடன் சமூக நெருக்கடியையும் அரசியல் கெடுபிடியையும் சரிவரக் கையாண்டார். அக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தனது கிளைகளைப் பரப்பும் விதத்தில் இராமநாதன் நுண்கலைப் பிரிவையும் விவசாய பீடத்தையும் ஆரம்பித்ததுடன் தொழிலாளர்கற்கை நெறியையும் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகினையும் ஆரம்பிக்கத் துணை புரிந்தார்.

இதில் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகுக்கான முன்மொழிவுகள் பேரவையிலும் மேலவையிலும் முன்வைக்கப்படுகின்றபோது பெருமளவான சர்ச்சையை எதிர் கொண்டது.



முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அப்போது கலைப்பீடத்தின் பீடாதிபதியாக விளங்கினார். கலை மற்றும் வர்த்தக பீட உள்வாரி மாணவர்கள் வெளிவாரி பட்டப்படிப்புகள் அலகினை நிராகரித்து வகுப்புகள் பகிஷ்கரிப்பினைக்கூட நடத்தினார்கள். பாரிய எதிர்ப்புகள் கிளம்பியதுடன் ஊடகங்கள் இதனை முதன்மைப்படுத்தியது.

அப்போது உள்வாரி மாணவர்களை அது தொடர்பான புரிதலை ஏற்படுத்த பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மாணவர் இருக்கைகளில்அமர்ந்து விளக்க மளித்ததுடன் மாணவர் தலைவர்களை அழைத்து துணைவேந்தருடன்உரையாடியதன் மூலம் அதனை நிறைவேற்றினார். இதில் பேராசிரியர்களான துரைராஜாவும் பாலசுந்தரம்பிள்ளையும் அப்போதைய பதிவாளரும் பலமான நிர்வாகக் கூட்டணியாகத் திகழ்ந்தனர்.

பேராசிரியர் அவர்களின் நிர்வாகத் திறமைகள் தனித்துவமானது. அவர் தனக்குப் பொருத்தமானவர்களை பக்கத்தில் வைத்திருப்பதை விட நிறுவனத்திற்குப் பொருத்த மானவர்களை இணங்காணவும் அவர்களைச் சரியாக வழிப்படுத்தவும் முயலுவார். ஒருபோதும் அவர் தனக்கான அணியை வைத்துக்கொள்வதில்லை. அணிகள் அவருக்காக உருவாவதைப்பல விடயங்களில் கண்டுள்ளது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம். அதனையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் தமிழ்ச் சமூகத்திற்காகவும் மேற்கொள்வார்.

பொறியியல் பேராசிரியரான துரைராஜா தமிழ்ச்சமூகத்தின் ஆளுமையின் வடிவமாகத் திகழ்ந்தார். அவரது இறுதிக்கால பல்கலைக்கழக நேரங்கள் அதனையே காட்டியது.

அவருக்கான பிரிவுபசார நிகழ்வுகளில் அவரது கழுத்தில் போடப்பட்ட மாலைகள் அவருக்கானது. அவரது சேவைக்காலமானது அவரைக் கௌரவப்படுத்துவதற்கானது. காரணம் அவர் தமிழ்ச் சமூகத்திற்கும் தான் பணிபுரிந்த நிறுவனத்திற்குமே சேவையாற்றினாரே தவிர தனிப்பட்ட நலனுக்கோ அபிலாசைக்கோ பணிபுரிந்தவரல்ல. அரசியல்கெடுபிடிக்குள்ளும்தனது தமிழ் சமூக அபிலாசையை வெளிப்படுத்தியவர். அதிலிருந்து ஒரு துளியேனும் விலகாத உயர்ந்த மனித நேயமிக்கவராக அவரது சேவைக்காலம் முழுவதும் அமைந்தது. எதனையும் எதிர்கொள்ளும் மனநிலை உள்ளவர்.

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பிள்ளையையும் தனது பிள்ளையாகக் கருதியவர். அவர்களைப் பாதுகாப்பதற்காக நேரங்காலம் பாராது பணிபுரிந்தவர்.

அப்படியான மாமனிதரின் நினைவுநாள் இன்றாகும். இவரைப்போன்ற பேராசிரியர்கள், நிர்வாகிகள், மனிதநேயம் மிக்கவர்கள், தற்துணிவு உள்ளவர்கள், உண்மையான மனித உள்ளம் படைத்தவர்கள் அருகிக்கொண்டு போகின்றனர். பேராசிரியரின் நினைவுநாளைச் சுமக்கும் மாணவர் கூட்டம் தமிழ்ச்சமூகத்தின் எதிர்காலத்திற்கு அவசியமானது.

அவரது நினைவுகளைச் சுமந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அவருக்கானவராக மட்டுமல்ல தமிழ்ச்சமூகத்தின் புலமைக்கும் அறிவுக்கும் செழிப்பூட்டுபவராகவே மதிக்கப்படுவார்கள். பேராசிரியரின் நினைவுகள் தொடரட்டும். அவரது எண்ணமும் சிந்தனையும் மலரட்டும்.

**கே.ரி.கணேசலிங்கம்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரசறிவியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்

# செல்ஃபி


ஜீன், கோண்டாவில்.


சர்மிலன் சர்மி


சங்கர், மாவிட்டபுரம்


சாரங்கன்ஸ்எல்கே


எஸ்.ஆர்.கரன், சுழிபுரம்.


எஸ்.ஏ.நிரோஜன், முகமாலை.


பூ.துசாந்


ரா.யதுசன்

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாகவோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர்,
முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப்பட வேண்டாதார்.
– திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யாழ்.பல்கலைக்கழகத்தால் மதுபாவனையை ஒழிக்க முடியும்

இலங்கையில் மதுபான விற்பனையில் வட மாகாணமே முதல் இடம் என்று கூறப்படும் அளவில் மது விற்பனை அதிகரித்துள்ளது.

இதேவேளை மது விற்பனைக்கு அப்பால் போதை வஸ்து விற்பனையும் வடக்கில் அதிகரித்துள்ளது என்ற செய்தியையும் நாம் மறந்துவிடக்கூடாது. இந்நிலையில் மதுபான விற்பனை நிலையங்களை வரையறுக்கவேண்டும் என வடக்கு மாகாணசபை நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு மாகாண சபை விடுத்த கோரிக்கையில் நியாயங்கள் இருந்தாலும் குடிப்பவர்களைத் திருத்துதல், மதுபாவனை உடல்நலத்துக்குக் கேடு என்ற உண்மையை எடுத்துரைத்தல், பஞ்சமா பாதகங்களில் மது அருந்துதலும் ஒன்று என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களை வழிப்படுத்தல் என்றவாறான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

மதுபானசாலை திறந்திருக்கிறது. அங்கு சாராயம் விற்பனைக்கு இருக்கிறது என்று மது அருந்தச் செல்பவர்கள் இருந்தால் மட்டுமே வடக்கு மாகாண சபையின் கோரிக்கை பொருத்தமானதாக இருக்கும். உதாரணத்திற்கு யாழ்.பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றி நிறைய மதுபான விற்பனை நிலையங்கள் உள்ளன. பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் கற்கின்ற பல்கலைக்கழக சூழலில் மதுபான நிலையங்கள் அமைக்கப்படும் போது, அதை அடித்துடைக்க வேண்டியவர்கள் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள்?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மதுபாவனையில் நாட்டம் கொண்டால், பாடசாலை மாணவர்கள் நிச்சயம் மதுபாவனையில் நாட்டம் கொள்வர் என்று ஒன்பது வருடங்களுக்கு முன்னர் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சமூகப் பிரஞ்ஞையுடன் நடந்து கொள்ளவில்லை. இதனால் இன்று பிரபல்யமான கல்லூரி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் கூடியிருந்து மது அருந்துதலிலும் போதைப் பாவனையிலும் ஈடுபடுகின்றனர்.

பல்கலைக்கழக அண்ணாக்கள் புத்திசாலிகள்– அவர்கள் செய்வது சரியானது– மரியாதையானது –ஆளுமையானது–சமூக அங்கீகாரத்தைக் கொண்டது என்ற நினைப்பு நிச்சயம் பாடசாலை மாணவர்களிடம் உள்ளது.

இதனால் அண்ணாக்களை தம்பிகள் பின்பற்றுகின்றனர். இங்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் என்று நாம் விழித்துரைப்பதற்குள் ஒட்டுமொத்த மாணவர்களும் அடங்கமாட்டார்கள். மிகத்தங்கமான மாணவர்கள் எவ்வளவோ பேர் இருக்கின்றனர்.

அதேநேரம் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் என்று நாம் கூறுவதற்குள் பட்டம் முடித்து வெளியேறியவர்களும் அடங்குவர். நாம் கூறிய குற்றச்சாட்டுக்கு இவர்களும் மிகப்பெரிய பங்களிப்புச் செய்தனர்.

ஆக, அன்புமிகு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களே! நீங்கள் நினைத்தால் வடபுலத்தில் மதுப்பாவனையை ஒழிக்க முடியும்.

வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்யுங்கள். பாடசாலைகள் தோறும் சென்று உங்கள் மாணவச் சகோதரர்களுக்கு புத்திமதி கூறுங்கள்.

இவற்றை எல்லாம் செய்வதோடு மது விற்பனை நிலையங்களுக்குச் சென்று அவர்களுக்கு அறத்தை –நம் இனம் சந்தித்த அழிவை எடுத்துரையுங்கள். எங்கள் தமிழ்ச் சமூகத்தைத் திருத்துவோம்.

இதைவிடுத்து மதுபான விற்பனை நிலையங்களை குறையுங்கள் என்றால் மறுபுறத்தில் கசிப்பு உற்பத்தி வேகம் எடுக்கும். எனவே எங்களை நாங்கள் திருத்துவதே ஒரேவழி. எங்கே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மாணவர்களும் இணைந்து வடபுலத்தில் மதுவுக்கு எதிராக பிரசாரம் செய்து மதுபாவனையை அடியோட்டக் குறைப்போம். இதை எங்கள் பல்கலைக்கழக சாதனையாக நாடு அறியச் செய்து காட்டுவோம்.

# சாதகமான தீர்வு கிடைக்காவிடின் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும்

## வடமாகாண பட்டதாரிகள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண அமைச்சரவையின் கீழ் உள்ள ஆளணி வெற்றிடங்களில் வட மாகாண பட்டதாரிகளை உள்ளீர்ப்பதற்கான மத்திய அமைச்சரவை அனுமதி தொடர்பில் வடமாகாண முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் வட மாகாண ஆளுநர் ஆகியோருக்கு மகஜர் கையளிக்கப்படவுள்ளதுடன் இவற்றுக்கு ஒருவார காலத்திற்குள் சாதகமான தீர்வு கிடைக்காதபட்சத்தில் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் அறிவித்துள்ளது.

வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தின் தலைவர் பிரதாபன் தலைமையில் நேற்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற வடமாகாண பட்டதாரிகளின ஒன்றுகூடலிலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளின் விபரங்களை உடனடியாக வட மாகாணசபை பதிவு செய்து சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறும் மற்றும் வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தை பதிவு செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளினால் கடந்த சித்திரை மாதம் 29 திகதி முதல் இரண்டு நாட்கள் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இரவுபகலாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து வட மாகாண அமைச்சர்கள் நால்வரினால் தமது அமைச்சின் கீழ் வட மாகாணத்தில் பட்டதாரிகளை உள்ளீர்ப்பதற்கான மேலதிக ஆளணி விபரம் வழங்குவதாகவும் பட்டதாரிகளுக்கு வேலையை பெற்றுத் தருவதற்கான முன்னெடுப்புக்களை தாம் மேற் கொள்வதாக உறுதிமொழி வழங்கியதுடன் குறித்த பணியை மேற்கொள்ள ஒரு மாத கால அவகாசம் வழங்குமாறு பட்டதாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனையடுத்து பட்டதாரிகளினால் ஆர்ப்பாட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது. இந்நிலையில் வடமாகாண அமைச்சர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கடந்த முதலாம் திகதி முதல் தமது அமைச்சின் கீழ் உள்ள மேலதிக ஆளணி விபரம் வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினருக்கு கையளிக்கப்பட்டுள்ள இந்நிலையிலேயே குறித்த கூட்டம நேற்று இடம் பெற்றுள்ளது. (இ-4)

# சர்வதேச சுற்றுச்சூழல் தினம் இன்று வலிகாமம் மேற்கில்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பிரதேச சபையும் வேள்ட்விசன் லங்கா நிறுவனமும் இணைந்து நடத்தும் சர்வதேச சுற்றுச் சூழல் தினம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண விவசாயம் கமநல சேவைகள் கால்நடைஅபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை வேள்ட்விசன் முகாமையாளர் இருதயம் மைக்கல் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.திருச்செல்வி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில்கௌரவவிருந்தினராகசங்கானை வேள்ட்விசன் உத்தியோகத்தர் வி.ஆதித்தன் கலந்து கொள்ளவுள்ளார். (இ–7)

## நெல்லியடி நகர்ப்பகுதியில் அந்தோனியார் உருவச்சிலை

(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியில் புனித அந்தோனியார் திருவுருவச் சிலை ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் வழிபாட்டு நிகழ்வுகளுடன் திறந்து வைக்கப்படவுள்ளது.


இதேவேளை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நேற்றைய மாதாந்த கூட்டத்தில் உரிய அனுமதிகள் பெறப்படாமல் புனித அந்தோனியாரின் சிலை அமைக்கப்படுவது குறித்து பிரதேச சபை உபதலைவர் செ.சாந்தரூபன் ஆட்சேபனை தெரிவித்துள்ளார். (இ-3-60)

# கலைப்பிரிவு வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி

யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் க.பொ.த உ/த கலைப்பிரிவு வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பாடசாலைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாகாணக் கல்வித் திணைக்கள கட்டமைப்புக் குழுவின் பரிந்துரை மற்றும் 07.05.2015ஆம் திகதி குறிப்பிட்ட பாடசாலை சமூகத்துடன் க.பொ.த (உ/த) பிரிவினை ஆரம்பிப்பது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின் தீர்மானம் என்பவற்றிற்கு அமைவாக 01.07.2015 ஆம் திகதி முதல் க.பொ.த (உ/த) கலைப்பிரிவு வகுப்புக்களை மேற்படி பாடசாலையில் ஆரம்பிப்பதற்கும் அப்பாடசாலையின் கட்டமைப்பினை 1–13 (1C) என வகைப்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது என வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## சனி பகவானை நேருக்கு நேர் வணங்கக்கூடாது என்பது ஏன்?

கோயிலில் ஸ்தாபிக்கப்பட்ட எந்த ஒரு தெய்வத்தையும் வணங்கும்போது, நேருக்கு நேர் நின்று தரிசிக்கக் கூடாது. அந்த தெய்வத்தின் பார்வையை சக்தியை நம்மால் தாங்கிக்கொள்ள இயலாது. சந்நிதியின் இரு பக்க வாட்டிலும் நின்று தரிசிக்க வேண்டும். தெய்வ சக்தியை நேருக்கு நேர் எதிர்கொள்ளும் சக்தியை உடைய நந்தி, கருடாழ்வார், சிம்மம் போன்ற அந்த தெய்வ வாகனங்கள் மட்டும் நேருக்கு நேர் அமைக்கப்பட்டிருப்பதை கோயில்களில் காணலாம்.

நவக்கிரகங்களில் ஒவ்வொரு கிரகத்துக்கும் அதன் இருப்பிடம், சேர்க்கை, பார்வை ஆகியவற்றைப் பொறுத்து ஒவ்வொரு விதமான பலன்கள் உண்டு. இதற்கு ஸ்தான பலம், ஸம்யோக பலம், த்ருஷ்டி பலம் என்று சொல்வார்கள். இயற்கையிலேயே அசுபகிரஹமான சனி கிரஹத்தின் 3, 7, 10ஆம் பார்வை பொதுவாக அசுப பலனையே ஏற்படுத்தும். ஆகவே, சனியின் பார்வை பொதுவாக அசுபத்தையே ஏற்படுத்தும் என்பதால், கோயில்களிலும் சனீஸ்வரன் சந்நிதியில் (சனியின் பார்வை நம் மீது விழக்கூடாது என்பதால்) நேருக்கு நேர் நின்று அமர்ந்து சனியை தரிசிப்பதைத் தவிர்க்கிறார்கள். இது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான்.

நவக்கிரகங்களை, தன் கட்டுப்பாட்டில் வேலைக்காரர்களாக வைத்து கொடுமைப்படுத்தி வந்த இலங்கை வேந்தன் இராவணன், சூரியன், சந்திரன், செவ்வாய் முதலான ஒன்பது கிரகங்களையும் தனது சிம்மாசனத்தின் கீழே அமைக்கப்பட்டிருக்கும் படிக்கட்டுகளில் படுக்க வைத்து, தான் அரியணையில் ஏறும்போதும் இறங்கும்போதும் அவர்களின் மார்பின் மீது தனது கால்களை வைத்து அவர்களை மிதித்துக் கொண்டே அரியணை ஏறும் வழக்கத்தைக் கொண்டிருந்தான். இதற்காக நவக்கிரகங்கள் ஒன்பதும் ஒவ்வொரு படிகளிலும் ஒவ்வொன்றாக வரிசையாக மேல்நோக்கி படுத்துக் கொண்டிருக்கும். ஆனால், நவக்கிரகங்களில் சனி கிரகம் மட்டும் (தனது பார்வை பட்டால் கெடுதல் விளையும் என்பதால்), மேல் நோக்கிப் படுக்காமல் கீழ் (தரையை) நோக்கி குப்புறப்படுத்திருந்தது.

இதை கவனித்த நாரதர், இராவணனின் கொடுமைக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதற்காக, இராவணன் சபைக்கு வந்து, இராவணன் நவக்கிரஹங்களை காலால் மிதித்து அரியணை ஏறுவதை கவனித்தார். அப்போது இராவணனிடம் நாரதர், இராவணா! உனது கட்டளையை அனைவரும் மதித்து, மேல் நோக்கி படிகளில் படுத்திருக்கிறார்கள். ஆனால், இந்த சனி கிரகம் மட்டும் உனது கட்டளையை அவமதிக்கும் வகையில் கீழ் (தரை) நோக்கி படுத்திருக்கிறது பார்த்தாயா! என்று கூற, இராவணனும் சனியை மேல் நோக்கி படுக்கச் சொன்னான்.

தனது பார்வையால் கெடுதல் விளையும் என்பதை சனி கிரகம் எடுத்துச் சொல்லியும் இராவணன் பிடிவாதமாக இருக்கானே, சனியும் படிக்கட்டில் மேல் நோக்கியவாறு திரும்பிப் படுத்தது. இராவணன் தனது காலால் சனியை மார்பில் மிதிக்கும்போது சனி கிரகத்தின் குரூரமான பார்வை, இராவணனின் மீது விழுந்தது. அது முதல் இராவணனுக்கு அனர்த்தம் ஆரம்பமாயிற்று. நாரதரும் வந்த வேலை முடிந்ததை எண்ணி மகிழ்ச்சியுடன் புறப்பட்டார். புராணத்தில் காணப்படும் இந்த நிகழ்வின் மூலம் சனியின் பார்வை நம் மீது விழாமல் இருப்பது சிறப்பானது என்பது தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்லர், ரூட் அபார சதம்

# சொந்தமண்ணில் நியூசிலாந்தை வீழ்த்தி சாதனை படைத்தது இங்கிலாந்து



நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 210 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சாதனை வெற்றியை பதிவு செய்துள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள நியூசிலாந்து அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் ஒருநாள் போட்டி நேற்று பர்மிங்ஹாமில் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித்தலைவர் பிரண்டன் மக்குலம் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதைத் தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ராய் (0), ஹேல்ஸ் (20) ஏமாற்றினர்.

பின் இணைந்த ஜோ ரூட், அணித்தலைவர் மோர்கன் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. மோர்கன் (50) அரைசதம் கடந்து ஆட்டமிழந்தார். சிறப்பாக விளையாடிய ஜோ ரூட் சதம் (104) அடித்து வெளியேறினார்.

பின்னர் அதிரடியாக ஆடிய பட்லரும் சதம் (129) கடந்தார். ரஷித் தன் பங்கிற்கு அரைசதம் (69) எடுத்தார். 50 ஓவர் முடிவில், இங்கிலாந்து அணி 9 விக்கெட்டுக்கு 408 ஓட்டங்களை குவித்தது. இதைத் தொடர்ந்து 409 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு மக்குலம் (10), குப்டில் (22) மோசமான தொடக்கம் கொடுத்தனர்.

சிறப்பாக விளையாடி வந்த வில்லியம்சன் (45) அரைசத வாய்ப்பை கோட்டை விட்டார். ராஸ் டெய்லர் (57) அரைதம் அடித்தார். எலியாட் (24) ஏமாற்றினார்.


இதைத் தொடர்ந்து வந்த வீரர்கள் சொதப்பல் ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் நியூசிலாந்து அணி 31.1 ஓவரில் 198 ஓட்டங்களில் சுருண்டது.

இங்கிலாந்து அணியில் ஸ்டீவன் பின், ரஷித் ஆகியோர் தலா 4 விக்கெட் கைப்பற்றினர்.

இதன் மூலம் இங்கிலாந்து அணி 210 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ஒருநாள் அரங்கில் இங்கிலாந்து அணி தனது சிறந்த வெற்றியை பதிவு செய்து புதிய சாதனை படைத்தது. (க)



தேசிய 15 வயதுப்பிரிவு காற்பந்தாட்ட அணியில் இடம்பிடித்த சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரன் கிறிஸ்டி அன்டன் ஜெனுசன், பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டார். சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஞானப்பொன்ராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இமானுவல் ஆர்னோல்ட் கலந்துகொண்டார்.

## கூடைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள்

15வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் இந்துமகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இந்து மகளிர் கல்லூரி அணி 6:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

17வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.இந்துக்கல்லூரி அணி 50:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் யாழ்.இந்துக்கல்லூரி அணி 63:48 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (க)

## சிங்கர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் தெல்லிப்பழை மகாஜனா வெற்றி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் சிங்கர் வெற்றிக் கிண்ணத்துக்காக பாடசாலைகளின் 15 வயது பிரிவு 3 அணிகளுக்கிடையில் நடத்தி வரும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி, ஒரு ஓட்டத்தால் வெற்றியீட்டியது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற இப்போட்டியில் ஸகந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி, 39.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ்.சதுர்சன் 29, எம்.பகீரதன் 20 ஓட்டங்களைப்பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தா அணி சார்பாக ஆர்.ஜஷ்சன் 3, எல்.டனுசன், கே.சோபிகன் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி, மிகுந்த போராட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி பெற முயற்சித்த போதும் கைகூடவில்லை.

இறுதியில் 48.2 ஓவர்களில் 142 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. எஸ்.நிகந்தன் 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் மகாஜனாக் கல் லூரி சார்பாக ஆர்.றேனுகன் 3, என்.பகீரதன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-23)




கே.சீ.சீ.சீ.விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் தொடரில் ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி. சம்பியன் பட்டம் வென்ற அவ் அணியினரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்...

யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்கள் திடீரென அதிகரிப்பதற்குக் காரணமென்ன என கேள்வியெழுப்பியுள்ள வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்ற அனைத்து சட்டவிரோதச் செயற்பாடுகளும் ஒரு மாத காலத்தில் சட்டத்தின் துணை கொண்டு ஒழிக்கப்பட வேண்டும் என வட மாகாணம் மற்றும் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளிடம் அறிவுறுத்தியுள்ளார்.

வீதிகளில் சண்டித்தனம் செய்வோர், ரவுடித்தனத்தில் ஈடுபடுவோர், கோஷ்டிகளாக மோதிக்கொள்பவர்கள், வாள் வெட்டுக்களில் ஈடுபடுபவர்கள் என பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற அனைத்து நபர்களையும், உடனடியாகக் கைது செய்து நீதவான் நீதிமன்றங்களில் ஆஜர்ப் படுத்துமாறு இந்த உயரதிகாரிகளுக்கு நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

**சட்டத்தின் துணையுடன் அடாவடிகள் ஒழிப்பு**

யாழ்ப்பாணத்தில் பல அடாவடித்தன நடவடிக்கைகள் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதனால், அனைத்து அடாவடித்தன நடவடிக்கைகளையும் சட்டத்தின் துணைகொண்டு, உடனடியாக ஒழிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை அந்த அதிகாரிகளுக்கு நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்காக, வீதிகளில் பெண்கள், மாணவிகளைப் பின்தொடர்ந்து இம்சிப்பவர்கள், சந்திகளில் கூடிநின்று, பெண்களுக்கு தொல்லை கொடுப்பவர்களை, தண்டனை சட்டக் கோவையின் கீழான அலைந்து திரிபவர்களைக் கட்டுப்படுத்தும் சட்டத்தின் கீழ் கைது செய்வதுடன், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும், பொது மக்களுக்கு இடைஞ்சல் கொடுக்கும் வகையிலும் வீதிகளில் கூடி நின்று அடாவடித்தனம் செய்பவர்களை தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் கைது செய்து நீதவான் நீதி மன்றங்களில் ஆஜர்ப்படுத்துமாறும் நீதிபதி பொலிஸ் உயரதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கி அறிவுறுத்தியுள்ளார்.

**போதைப்பொருள் விற்பனை**

மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் போதைப் பழகத்தைத் தூண்டுகின்ற பான் பராக், மதன மோகனம், லேகியம் போன்ற போதையூட்டுகின்ற சிற்றுண்டிகளை விற்பனை செய்யும் வியாபாரிகளை மிகவும் அவதானத்துடன் கண்காணிக்குமாறும், அவர்கள் விற்பனை செய்யும் பொருட்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, அவசியம் ஏற்படின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிபதி பொலிஸாருக்கு வழிகாட்டியுள்ளார்.

மாலை 6 மணிக்குப் பின்னர் பெண்கள் வேலைக்கு அனுமதிக்கப்படுவதில்லை. தாதியர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றார்கள். இந்த நிலையில் 6 மணிக்குப் பின்னர் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துகின்ற அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களையும் அழைத்து, உரிய சட்ட ரீதியான விளக்கங்களை வழங்கி, மாலை 6 மணிக்குப் பின்னர் மாணவ மாணவிகளுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவதைத் தவிர்க்குமாறும், அதனையும் மீறிச் செயற்பட்டு, ஏதாவது அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறுமானால், அதற்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்துமாறும் நீதிபதி பொலிஸ் உயரதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

**உரிய நேரங்கள் இன்றி இயங்கும் மதுபான சாலைகள்**

யாழ்ப்பானம் நகர்ப்பகுதிகளில் உள்ள மதுபான சாலைகள் நேரம் கெட்ட நேரத்தில் திறந்து, நேரம் பிந்தி பூட்டுவதும், அடாவடித்தனங்களில் ஈடுபடுபவர்களுக்கு முக்கிய இடமாகவும், முக்கிய காரணமாகவும் இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டியுள்ள நீதிபதி இத்தகைய மதுபான சாலைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஆலயங்கள், சமய நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகில் உரிய அனுமதிப் பத்திரம் பெற்றுச் செயற்பட்டு வருகின்ற மதுபானசாலைகளின் பெயர்ப்பட்டியல்களையும் விபரங்களையும் திரட்டி, இவற்றுக்கு சட்ட வரம்பு எல்லைகளுக்கு முரணாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, பொலிஸ் மா அதிபர் ஊடாக, மதுவரி ஆணையகத்திற்கு அனுப்பி, உள்ளக நிர்வாக நடைமுறைகளின் மூலம் சீர் செய்யுமாறும் நீதிபதி வழிகாட்டி வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களினதும், தமிழ் சமூகத்தினதும், முக்கியமான விடயங்களான கல்வி, பெண்களின் கௌரவம் மற்றும் அவர்களின் பாதுகாப்பு என்பவற்றைப் பாதிக்கின்ற செயற்பாடுகள் அவர்களின் உணர்வுகளைத் தூண்டி விடுவதாக அமையும். உணர்வுபூர்வமான இந்த விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களைக் கண்காணித்து, அத்தகைய செயற்பாடுகளை முளையிலேயே கிள்ளி எறிவதற்குரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால், ஒரு மாத காலத்தில் யாழ்ப்பாணம் அமைதிப் பூங்காவாக மாற்றம் பெறும் என்றும் நீதிபதி இளஞ்செழியன் பொலிஸ் உயரதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

**பொலிஸாருக்கு விளக்கமளிப்பு**

யாழ்ப்பாணத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக ஏற்கெனவே தாங்கள் எடுத்துள்ள சட்ட நடவடிக்கைகள் தடுப்புச் செயற்பாடுகள் பற்றி வடமாகாணம் மற்றும் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் நீதிபதிக்கு விளக்கமளித்தனர்.

இதனையடுத்து, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அனைத்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், பிராந்திய பொலிஸ் அதிகாரிகள், அவர்களுக்குக் கீழ் பணியாற்றுகின்ற பொலிஸ் அதிகாரிகள், தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு இந்த அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கி, இந்த மாவட்டங்களில் சமூக விரோதச் செயற்பாடுகளை ஒரு மாத காலத்தில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும் என்று நீதிபதி இளஞ்செழியன் வடமாகாணம் மற்றும் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (எ-11)

# பசில் ராஜபக்ஷவுக்கு...

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக, திவிநெகும திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆர்.ஆர்.கே.ரணவக்க மற்றும் திவிநெகும திட்டத்தின் பிராந்திய பணிப்பாளர் பந்துல திலகசிறி ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# போதைப்பொருள்...

தெறிந்து, ஒரு சமூகத்தையே அழிக்க வல்லது. அதன் காரணமாகவே அத்தகைய தீய சக்தியைக் கொண்டுள்ள போதைப் பொருளை சிறிய அளவில்தானும், உடைமையில் வைதிருப்பதும் அதனை விற்பனை செய்வதும் பாரதூரமான குற்றமாகக் கருதி அதற்கு மரண தண்டனை அல்லது ஆயுள்தண்டனை விதிக்கும் வகையில் போதைவஸ்து கட்டளைச் சட்டம் கடுமையான விதிகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டிருக்கின்றது என தெரிவித்துள்ளார்.

நீதிபதி இளஞ்செழியன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மிகச்சிறிய அளவாகக் கருதப்படுகின்ற 2 கிராம் ஹெரோயின் மோபின் அல்லது அபின் போன்ற ஏதாவது ஒரு போதைப் பொருளை ஒருவர் உடைமையில் வைத்திருந்தால் அல்லது விற்பனை செய்தால் அந்த நபர் மேல் நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படும். இரண்டுகிராம் எடைக்கும் குறைவாக மில்லி கிராம் அளவில் ஹெரோயின் மோபின் அபின் போன்ற போதைப் பொருளில் ஏதாவது ஒன்றை உடைமையில் வைத்திருந்தால் அல்லது விற்பனை செய்தால் கடுழியச் சிறைத் தண்டனையும் தண்டப்பணமும் விதிக்கப்படும் என்றார். (எ-11)

# விசாரணை குழுவுக்கு...

மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார் என ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஏற்கெனவே மூன்று ஆணையாளர்கள் இருக்கின்ற நிலையில் எண்ணிக்கையை ஐந்தாக அதிகரிக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் மேலும் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனத்தையடுத்து ஐந்து ஆணையாளர்களும் ஐந்து இடங்களில் இருந்தவாறு விசாரணைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்கமையவே எதிர்வரும் காலங்களில் விசாரணைகள் நடைபெறும் என்றும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# இலங்கையுடன்...

கூட்டுத்தாபனம் ஈரானிடமிருந்து கொள்வனவு செய்துள்ளதாகவும், குறித்த கப்பல் இன்னும் நாட்டை வந்தடையவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஈரானிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதாக சந்தேகிக்கப்படும் குறித்த எரிபொருள கப்பலை இலங்கை அனுமதிக்கக் கூடாது என அமெரிக்கத் தூதரகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் பி.எம்.எஸ். படகொடவிற்கு அறிவித்துள்ளது.

அத்துடன் மார்கஸ் எப் வேல் என்னும் கப்பலின் ஊடாக இந்த எரிபொருட்கள் கொண்டு வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானிலிருந்து எரிபொருள் கொள்வனவு செய்யக்கூடாது என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு நன்றாகவே தெரியும். எனவே குறித்த எரிபொருள் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொள்ள கூடாது என அமெரிக்க தூதரகம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. (எ-11)

# பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் இந்திய அணி ஆதிக்கம்

பங்களாதேசுக்கு எதிராக ஃபதுல்லாவில் நடைபெற்று வரும் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர முடிவில், இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 239 ரன்களைக் குவித்து வலுவான நிலையில் உள்ளது. ஷிகர் தவான 150 ரன்களுடனும், முரளி விஜய் 89 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்திய - பங்களாதேஷ் அணிகள் இடையிலான ஒரே யொரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷின் ஃபதுல்லா நகரில் நேற்று ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்ந்தெடுத்து ஆடிய இந்தியா, ஆரம்பத்திலிருந்தே நிலையானதும் அதிரடியான துமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

தொடக்க வீரர்கள் தவான், விஜய் இருவரும் சரியான இணையாக நிலைத்து நின்றனர். தவான் வேகமாக ரன் சேர்க்க, விஜய் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினா ர்.

ஷிகர் தவான் 158 பந்துகளில் 150 ரன்கள் விளாசினார். முரளி விஜய் 178 பந்துகளில் 89 ரன்கள் சேர்த்தார்.

உணவு இடைவேளைக்கு முன்பாகவே மழையால் தடைபட்ட ஆட்டம், 3 மணி அளவில்தான் மீண்டும் தொடர்ந்தது. அப்போதும் இந்திய அணியின் வேகம் தடைபடாமல் தொடர்ந்தது.

கடைசி வரை தொடக்க வீரர்கள் இருவரையும் களத்தை விட்டு வெளியேற்ற முடியாமல் பங்களாதேஷ் பந்துவீச்சாளர்கள் தடுமாறினர்.

நேற்றைய ஆட்ட நேர முடிவில், இந்திய அணி 239 ரன்களைக் குவித்து விக்கெட் இழப்பின்றி இருந்தது. முரளி விஜய்க்கு சாதகமாக முடிந்த சில லெக் பிஃபோர் முடிவு கள் சந்தேகத்தை ஏற்படுத்தினாலும், மற்றபடி இந்திய அணியே நேற்று களத்தில் ஆதிக்கம் செலுத்தியது.

இன்றைய போட்டியில் அதிக ரன்களைக் குவிக்கும் பட்சத்தில், பங்களாதேஷை நெருக்க இந்திய அணிக்கு இது சிறந்த வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்க லாம்.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின்போது திடீரென டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து கப்டன் தோனி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இந்திய டெஸ்ட் அணி யின் கப்டனாக விராட் கோலி நிய மிக்கப்பட்டார். எனினும் முழு நேர கப்டனாக கோலி களமிறங்கும் முதல் போட்டி இதுதான்.

அதனால், அவருடைய கப்டன் ஷிப் திறமையை சோதனை செய்யும் போட்டியாக இது பார்க்கப்படுகிறது. கோலி வெற்றிகர மான துடுப்பாட்ட வீரராக பரிணமித்திருந்தாலும், அவர் கப்டனாக இந்திய அணியை எப்படி வழி நடத்தப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

டெஸ்ட் போட்டியில் தோனி இல்லாமல் இந்திய அணி எப்படி விளையாடப் போகிறது என்பதை சோதிக்கும் போட்டியாகவும் இது பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், முதல் நாள் ஆட்டம் இந்திய அணிக்கு சாதகமாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# திறப்புவிழாவும் விளையாட்டு விழாவும்

(புன்னாலைக்கட்டுவன்)

ஈவினை கிழக்கு புன்னாலைக்கட்டுவன் கலையரசி சனசமூக நிலையத்தின் கலையரங்க திறப்பு விழாவும் முன்பள்ளி விளையாட்டு விழாவும் இன்று பிற்பகல் 12.30 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் அ. ரமீன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சில்வஸ்திரி அலன் ரீனும், சிறப்பு விருந்தினராக ஜே/209 கிராம சேவையாளர் ஆ.ரஜீவன், கௌரவ விருந்தினராக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் உடுவில் பிரதேச செயலகம் திருமதி ரதி நகுலேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ-78)

# சந்தேக நபர் விடுதலையானார்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மாணவி சி.வித்தியாவின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட 10 ஆவது சந்தேகநபர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர் மீது கடும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் அவர் குற்றமற்றவர் எனத் தெரிவித்து நேற்று விடுதலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவர் கைதாகி இருந்த சமயம் அவரது வீட்டில் உள்ள கணனி, தொலைபேசிகள் என்பன தொடர்பில் பொலிஸார் ஆராய்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# முதிரைக் குற்றிகள் பொலிஸாரால் மீட்பு

(கிளிநொச்சி)

சட்ட விரோதமாக கடத்த முயன்ற முப்பது முதிரைக் குற்றிகளை கிளிநொச்சி பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

நேற்று மாலை தர்மபுரத்திலிருந்து பரந்தன் நோக்கி மீன் கொண்டு செல்ல பயன்படும் கூலர் வாகனமொன்று வேகமாக சென்று கொண்டிருந்ததை பொலிஸார் அவதானித்துள்ளனர். அவ் வாகனத்தை பிடிப்பதற்கு கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் முயற்சித்தனர்.

எனினும் குறித்த வாகனம் நிற்காமல் வேகமாக சென்றது. இதனால் சந்தேகம் அடைந்த பொலிஸார் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பரந்தன் சந்திக்கு அருகில் வைத்து மடக்கிப்பிடிக்க முற்பட்டவேளை சாரதிவாகனத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் குறித்த வாகனத்திலிருந்து மூன்று இலட்சம் பெறுமதியான முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

வாகனத்தின் ஆவணங்களை கைப்பற்றிய பொலிஸார் குற்றவாளிகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லா பிரே...

பின் 20-வது திருத்தச் சட்டமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் வரை, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை குறித்த செயற்பாடுகள் இடம்பெற மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து, இந்த விடயம் குறித்து ஜனாதிபதி எவ்வித கருத்தையும் வெளியிடாமல் இருந்து வந்தார்.

இந்நிலையில் அரசியலமைப்பின் 20-வது திருத்தச்சட்ட மூலத்துக்கு தற்போது அமைச்சரவையில அனுமதி கிடைத்துள்ள நிலையிலேயே, ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களிடம் நம்பிக்கையில்லா பிரேரணை விடயத்தை கைவிடுமாறு கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியன் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைமையில் 112 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை இவ் வாரம் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் நடத்துமாறு நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு முன்னர் நடை பெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வலியுறுத்தவுள்ளதாக தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இந்தக் கோரிக்கையை எதிர்க்கட்சிகள் இதுவரை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# அப்துல் கலாம்...

மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி தொடர்பிலான பிரச்சினைகள் குறித்து இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அப்துல் கலாம் இலங்கை வரவுள்ளார்.

இந்த மாநாடு எதிர்வரும் 26-ம், 27-ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மாநாட்டில் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியை கலந்து கொள்ளுமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட் டலி சம்பிக்க ரணவக்க கடந்த 8-ம் திகதி அவரை சந்தித்து அழைப்பு விடுத்துள்ளார் என மஹிஷினி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் 70-வது விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க்கிற்கு செல்லவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# பாதுகாப்புக்குத் தேவை...

கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறினார்.

யாழ். குடாநாட்டில் பாதுகாப்பு மற்றும் சிவில் தேவைகளுக்காக சுவீகரிக்கப்பட்டிருந்த 19,159 ஏக்கர் காணி இதுவரை விடுவிக்கப்படடுள்ளது.

யுத்தம் நிறைவுபெற்றபோது யாழ்ப்பாணத்தில் 152 இராணுவ முகாம்கள் இருந்தபோதிலும் தற்போது அந்த எண்ணிக்கை 93 ஆகக குறைக்கப்பட்டுள்ளது.

59 இராணுவ முகாம்கள் முற்றாக அகற்றப்பட்டுள்ளது. 51ஆம் 52 ஆம் மற்றும் 55 ஆம் படைப்பிரிவுகளைச் சேர்ந்த இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த 12,901 ஏக்கர் காணியும் பலாலி இராணுவ முகாமின் கட்டுப்பாட்டில் இருந்த 628 ஏக்கர் காணியும் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதாக யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

யாழ் குடாநாட்டில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி சுமுகமாக வாழ்க்கை நடத்துகின்றனர்.

யாழில் அதிக எண்ணிக்கையான படையினர் குவிககப்பட்டுள்ளனர் என்ற தகவலில் எதுவிதமான உண்மையும் இல்லை. தேவையான எண்ணிக்கையானவர்கள் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இனிமேல் பயங்கரவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இதுவரையில் 99.44 வீதமான மிதிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சில பிரதேசங்களில முக்கியத்துவ அடிப்படையில் மிதிவெடி அகற்றும் பணிகள் நடைபெறுகின்றன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மந்தகதியிலேயே மீள்குடியேற்றப்பணிகள் நடைபெறுகின்றன.

மேலும், வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பு மற்றும் சிவில் தேவைகளுக்காக சுவீகரிக்கப்பட்டிருந்த பகுதிகளில் காணிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறைவுபெற்றபோது யாழ்ப்பாணத்தில் 152 இராணுவ முகாம்கள் இருந்தபோதிலும் தற்போது அந்த எண்ணிக்கை 93 ஆகக் குறைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, 59 இராணுவ முகாம்கள் முற்றாக அகற்றப்பட்டுள்ளது. அத்துடன் 51ஆம், 52 ஆம் மற்றும் 55 ஆம் படைப்பிரிவுகளைச் சேர்ந்த இராணுவத்தி னரின் கட்டுப்பாட்டில் இருந்த 12,901 ஏக்கர் காணியும் பலாலி இராணுவ முகாமின் கட்டுப்பாட்டில் இருந்த 628 ஏக்கர் காணியும் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்கள் சந்திப்பிற்கு அழைக்கப்படவில்லை.

எனினும் கொழும்பு ஊடகத்துடன் தொடர்புடைய இருவர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்ப் பாணத்திற்கு வருகைதந்திருந்த கொழும்பு ஊடக வியலாளர்கள் இராணுவத்தின் ஏற்பாட்டில் யாழ். கோட்டை, நூல் நிலையம் உள்ளிட்ட பல இடங்களையும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (எ-11)

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...
STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA
கனடா Express Entry Visa
தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR)
Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
Student VISA
UK, Australia, Spain New Zealand, Switzerland, Canada & Malaysia
FREE Assessment
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11
(C-1235)

# புதிய தேர்தல் முறையால்...

தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட, தேர்தல் முறை மாற்றம் குறித்த யோசனைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

தொகுதி வாரியாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 125 ஆக குறைக்கப்படுமானால் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் குறைவடையும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், தொகுதிவாரியாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு குறைக்கப்பட்டால் நிலப்பரப்பு மற்றும் வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் தற்போது 11 தொகுதிகள் உள்ளன. இந்த எண்ணிக்கை நான்கு தொகுதிகளாக குறைவடையும் நிலை ஏற்படும். இதனால் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் குறைவடையும். இதற்கு இடமளிக்க முடியாது

இவ்வாறு வடக்கில் தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படுமானால் அது அனைத்துலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளார். (எ-11)

# அமைச்சர்...

ஜப்பானில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் தனது இந்த விஜயத்தின் போது, இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகள், இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, கலாசார விவகாரங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து , ஜப்பான் வெளிவிவகார அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

அதேவேளை டோக்கியோவில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறும் ஆசியாவில் சமாதானத்தை கட்டியெழுப்புதல், தேசிய நல்லிணக்கம் மற்றும் ஜனநாயக மயமாக்கல் என்ற தலைப்பிலான கருத்தரங்கில் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் இலங்கையின் அனுபவங்கள் என்ற தலைப்பில் அமைசசர் மங்கள சமரவீர உரையாற்ற உள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-11)

# மகிந்தவுக்கு...

இது குறித்து ஆராய்ந்த பின்னர் விசாரணைகளை நடத்த உ[illegible]தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் அவருக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படாமை தொடர்பில் நேற்று பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் ஓய்வுபெற்ற முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கும் பாதுகாப்பை விட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மேலதிகமான பாதுகாப்பை வழங்குவது பற்றி கவனம் செலுத் தப்பட்டு வருவதாக பிரதியமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். (எ-11)

இலவச கருத்தரங்கு
Diploma in Data Analysis through Microsoft Excel
● Excel இன் உதவியுடன் தகவலினை எவ்வாறு ஆய்வு செய்வது?
● 100க்கும் அதிகமான Excel Functionsகளை நடைமுறையில் பயன்படுத்தி எவ்வாறு வேலையினை இலகுபடுத்திக் கொள்வது?
இதுபோன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்படும்
(715)
இடம்:- Student Success Centre 320, Main Street, Jaffna.
கட்டணம்:- இலவசம்
சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் மட்டுமே
ஆசனப் பதிவுகளுக்கு அழையுங்கள் - 077 616 9470

யாழ். நகரில் பிரபல்யமான
கணினி திருத்தும் பாடநெறி
Computer Repairing Course
★ ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
★ சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
★ தனிப்பட்ட கவனிப்பு.
★ 1000 இற்கு மேற்பட்ட கணினி திருத்தும் இரகசியங்கள்.
★ சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
இலவசமாக இரகசியங்கள் அடங்கிய (CD), கையேடு வழங்கப்படும்.
வயதெல்லை இல்லை.
ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது.
June 13ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 13,14,15,16 ஆகிய நான்கு தினங்களில்
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
பாடநெறிக் கட்டணம் 8500/= / பதிவுக் கட்டணம் 2000/=
(C-1234) (C/16500)(10.6.1)
குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும்
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
0777 444 225 BTEC #21, Sirimbiyadi Land, (off Stanley Road), Jaffna.

கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய்
பராமரிப்பாளர் தேவை
மேற்படி எமது வைத்தியசாலையின் முதியோர் பராமரிப்பு நிலையத்திற்கு முதியோர் பராமரிப்பாளர்கள் (பெண்கள்) தேவை. வைத்தியசாலைக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 14.06.2015 மு.ப 9.00 மணிக்கு சமுகமளிக்கவும்.
தலைவர்
(C-1228)

பிற்ஸ்மன்ஸ் - மானிப்பாய்
A/L - புவியியல் - N.BABU
◆ A/L - 2017 சனி, ஞாயிறு - 1 Pm
◆ A/L - 2016 சனி, ஞாயிறு - 3 Pm
➤ புதிய அனுமதிகள் வழங்கப்படும்
➤ தனிப்பாட அனுமதி உண்டு (718)

French வகுப்புக்கள்
துரித பேச்சுப் பயிற்சி
உச்சரிப்பு விதிகள்
இலக்கண விளக்கங்கள் - தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்
Student Success Centre
320, Main Street, Jaffna.
077 9936 140 (712)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.